ISSN 1391-9504

# விஜய்


Vijey விஜய்

06.05.2009 - மலர் 06, இதழ் 09

## தரம்-5 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

## க.பொ.த (உ/தர) பாடத் தெரிவுகள்

ஆலோசனை கட்டுரை



## ஒளியூட்டும் வெசாக் தினம்



## உலகின் மிகப்பெரிய மிருகக்காட்சிசாலை

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rs.25.00

# உலகின் மிகப்பெரிய மிருகக்காட்சிசாலை











உலகிலேயே மிகப் பெரிய மிருகக்காட்சிசாலை தென்னாபிரிக்காவில் 'டிரான்ஸ்வர்' என்ற இடத்தில் இருக்கின்றது. இதன் பெயர் 'க்ருகர் நெஷனல் பார்க்' என்பதாகும். இந்த மிருகக்காட்சிசாலை சுமார் 12 ஆயிரத்து 441.6 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்டது. இதில் சுமார் ஆயிரம் யானைகளும், 250 ஒட்டகங்களும், 600 காட்டெருமைகளும், 500 சிங்கங்களும் பலவகைப்பட்ட 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விலங்குகளும் உள்ளன.

இந்த மிருகக்காட்சிசாலையைச் சுற்றி 448 கி.மீற்றர் நீளத்துக்கு மோட்டார் வாகனம் போகக்கூடிய அளவிற்கு அகலமான சாலை போடப்பட்டிருக்கிறது. காடுகளில் மிருகங்கள் எத்தகைய இயற்கை சூழ்நிலையில் இருந்தனவோ அதேபோன்று இருக்கும்படியாக இந்த மிருகக்காட்சிசாலையில் மிருகங்களை வைத்திருக்கின்றனர். அநேக விலங்குகள் திறந்த வெளியில் திரிய விடப்பட்டுள்ளன. இவை பார்வையாளர்களுக்கு எந்த விதத்திலும் தீங்கு செய்யாத வகையில் மிருகக்காட்சிசாலையை வடிவமைத்து இருக்கின்றனர்.

உலகின் பல்வேறு இடங்களில் வாழும் விலங்குகளை ஒரே இடத்தில் இணைத்து வைப்பது என்பது அவ்வளவு சுலபமல்ல. உதாரணத்துக்கு கோலாக் கரடி ஆண்டு முழுவதும் பனியிலேயே வசிக்கக் கூடியது. சிலந்திக் குரங்குகள் பனியில்லாத வெப்பப் பிரதேசத்தில் வசிக்கக்கூடியவை. இவற்றை ஒரே இடத்தில் வைக்க வேண்டுமே. மிருகக்காட்சிசாலையை பாதுகாக்கின்றவர்கள் கோலாக் கரடி பனியில் இருக்கும்படியாகவும் சிலந்திக் குரங்குகள் உஷ்ணமான இடத்தில் இருக்கும் படியாகவும் சூழ்நிலையை அமைத்துள்ளார்கள். உணவு விஷயத்திலும் விலங்குகளைப் பராமரிப்பது கஷ்டமான காரியம்.யானைக்குப் புல்லும் தழையும் அதிகமாக வேண்டும். ஆனால், புலிக்கு அசைவம்தான் வேண்டும்.

சில விலங்குகளுக்கு புத்தம் புதிய மீன்கள் வேண்டும். குரங்குகளுக்கு புதிய காய்கனிகள் வேண்டும். இதனால், இந்த மிருகக்காட்சிசாலைக்கு தினமும் நூற்றுக்கணக்கான வித்தியாசமான உணவு வகைகள் தேவைப்படுகின்றன.

நாள்தோறும் ஏராளமானவர்கள், மீன்கள், ரொட்டிகள், புல் தானியம், திராட்சை, பால், தோடம்பழம், முட்டை, பால் பவுடர் போன்றவற்றை கொண்டு வந்து கொடுக்கிறார்கள். இரையை உண்ண வைப்பதிலும் சிரத்தை எடுக்கவேண்டியுள்ளது. மலைப்பாம்புக்கு இரை போடும்போது அதன் உணவை தொண்டைக்குள் வைத்து தள்ளிவிட்டால்தான் சாப்பிடும். அதேபோல் மிருகங்களுக்கு வியாதிகள் வந்து விட்டாலும் பிரச்சினைதான்.

பல் வலியால் அவதிப்படும் சிங்கத்தின் பல்லைப் பிடுங்குவதும் யானைக்குத் தொந்தரவு தரும் கால் நகத்தை வெட்டுவதும், கொரில்லாக் குரங்கின் கபவாதக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதும் இங்குள்ள ஊழியர்களின் கடமையாக இருக்கிறது. அக்கறையோடு இருந்தால் மட்டுமே இவற்றை செய்யமுடியும்.அந்த அக்கறையோடு இவர்கள் விலங்குகளைக் கவனித்து வருகிறார்கள்.

# பயங்கரப் பாம்பு வேட்டைமூலம் வாழ்க்கை நடத்தும் மக்கள்

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பார்கள். பாம்பைக் கண்டால் அஞ்சி நடுங்குவோரே அதிகம். நாம் அஞ்சி நடுங்கும் அளவுக்கு பாம்புகள் பயங்கரமான விலங்குகளா? என்று கேட்டால் பாம்புடன் நெருங்கிய தொடர்புள்ளவர்கள் இல்லை என்றே பதில் கூறுகின்றார்கள்.

உண்மையில் பாம்புகள் மிகவும் பயந்த சுபாவமுடையவை என்றும் மனிதர்களைக் கண்டுதான் அவை அதிகம் அஞ்சுகின்றன என்றும் அவர்கள் கூறுகின்றனர். பயங்கரப் பாம்புகளை வேட்டையாடி அவற்றின் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் ஏராளமானவர்கள் இவ்வுலகில் வாழ்கின்றனர். பாம்புகளைப் பிடித்து பாம்பாட்டிகளுக்கும் மருத்துவத்துக்கும் பாம்புத்தோல் ஏற்றுமதிக்கும் என விற்பனை செய்து இவர்கள் தமது வாழ்க்கையை நடத்துகின்றனர்.

பாம்புத்தோலில் இருந்து கைப்பை, சப்பாத்து, இடுப்புப்பட்டி, புத்தக அட்டை என்று பல்வேறு பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன. இந்தியாவிலிருந்து வருடாந்தம் லட்சக்கணக்கான பாம்புத் தோல்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதற்காக பல்வேறு பாம்பு இனங்கள், மலைப் பாம்புகள் என்று ஏராளமான பாம்புகள் பிடிக்கப்படுகின்றன.



தென் இந்தியாவைப் பொறுத்தளவில் 'இருள' என்னும் ஆதிவாசி இனத்தவர்கள் ஏற்றுமதிக்காக ஏராளமான பாம்புகளைப் பிடித்து விற்பனை செய்கின்றனர். பாம்புத்தோல் ஏற்றுமதி தற்பொழுது தடை செய்யப்பட்டிருப்பினும், பாம்பின் விஷம் மருத்துவ தேவைக்குப் பயன்படுவதால் காடுகளில் பாம்புகளைப் பிடிக்கும்நிலை தற்போதும் இருந்து வருகிறது. இந்த விஷமானது காய்ந்து பொடியான நிலையில் மருந்துப் பொருள் தயாரிப்புக்கு விற்பனை செய்யப்படுகிறது. விஷம் எடுக்கப்பட்ட பின்னர் பாம்புகள் மீண்டும் காட்டில் விடப்படுகின்றன.




ஒரிஸ்ஸாவின் பட்டியா என்னும் கிராமத்தில் வாழும் மக்களில் அநேகர் பாம்பு பிடிப்பவர்கள். இவர்கள் 'கிங் கோப்ரா' (King Cobra) என்னும் ராஜ நாகத்தைப் பிடித்து பெரிய நகரங்களுக்குச் சென்று பாம்பு விளையாட்டுக் காட்டி வருவாய் ஈட்டுகின்றனர். இவர்கள் விளையாட்டுக் காட்டும் பாம்புகள் சிலவற்றுக்கு வாய் கொடூரமான முறையில் தைக்கப்பட்டு இருக்குமாம். இப்படிப்பட்ட செயல்களால் இப்பாம்புகள் மிகுந்த சித்திரவதைகளை அனுபவித்து நோயுற்றும் விடுகின்றன. வாய் தைக்கப்படுவதாலும் பற்கள் பிடுங்கப்படுவதாலும் இவற்றால் உணவுகூட உண்ண முடியாத நிலை ஏற்பட்டு ஓரிரு மாதங்களில் இறந்து விடுகின்றன.

உண்மையில்,பாம்பாட்டியின் மகுடிக்கு ஆடும் பாம்பானது நல்ல நிலையில் இருக்கவில்லை என்பதை அறிய வேண்டும். பயத்தினாலும் நோயுற்ற நிலையிலுமே அது அவ்வாறு ஆடுகின்றதாம். பாம்புகள் அனுபவிக்கும் துயரம் இவை மட்டுமல்ல. சில நாடுகளில் பாம்புகள் உணவுக்காகவும் கொல்லப்படுகின்றன.

ராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்று நிகழ்வுகளை நினைவுகூரும் வெசாக் தினம்



மே மாதம் 08 ஆம் திகதியன்று வைகாசி விசாக (வெசாக் பண்டிகை) திருநாளை பௌத்த மக்கள் கொண்டாடுகின்றனர்.

இந்தியாவின் கபிலவஸ்து நகருக்கு அருகில் உள்ள 'லும்பினி' என்னுமிடத்தில் அரச குடும்பமொன்றில் பிறந்தார் கௌதம புத்தர். இவருடைய பிறப்பைப் பற்றி ஆரூடம் கூறிய சோதிடர்கள் இவர் நோய், இறப்பு, முதுமை, துறவறம் ஆகிய நான்கையும் காணக்கூடாது என்றும், அவ்வாறு காணநேரிட்டால் உலக வாழ்வை துறந்து துறவியாகிவிடுவார் என்றும் கூறியதையடுத்து அவற்றை அவர் பார்க்க முடியாத வகையில் பெற்றோர் அவரை பாதுகாத்து வளர்த்தனர்.ஆனாலும், காலப்போக்கில் அவர் இந்த நான்கையும் காணும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதனையடுத்து, அவர் சோதிடர்கள் கூறியது போல் உலக வாழ்வைத் துறந்து துறவுக் கோலம் பூண்டார்.



புத்தபகவானின் வாழ்வில் இடம்பெற்ற முக்கிய மூன்று திருப்பங்களான பிறப்பு, பரிநிர்வாணம், முக்தி ஆகிய மூன்று நிகழ்வுகளை நினைவுகூரும் வகையிலேயே இந்தத் திருநாள் கொண்டாடப்படுகிறது. இந்த மூன்று நிகழ்வுகளும் இந்த வைகாசி விசாகத் தினத்திலேயே இடம்பெற்றதனால் இத்திருநாள் வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

குழந்தைகள், சிறியோர், பெரியோர் என யாவரையும் மகிழ்ச்சிப்படுத்தும் ஒரு நிகழ்வாகக் கொண்டாடப்பட்டு வருவதுதான் 'வெசாக்' எனப்படும் இந்த வைகாசி விசாகத் திருநாள்.

வெசாக் நாளில் எங்கிலும் வண்ணத் தோரணங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இத்தோரணங்களின் மூலம் பௌத்தம் தொடர்பான வரலாற்றுச் சம்பவங்கள் என்பன கதைகளாக கூறப்படுவதைக் காணலாம். அத்தோடு வீதி எங்கிலும் ஆங்காங்கே தண்ணீர் பந்தல்கள் அன்னதானப் பந்தல்கள் என்பன அமைக்கப்பட்டு இருப்பதையும் காணலாம்.

பௌத்த தர்மத்தின்படி புண்ணியத்தை தேடிக் கொள்ளும் வகையில் இந்த தானம் வழங்கும் நடைமுறையானது பாரம்பரியமாக நடைபெற்று வருகின்றது. ஆங்காங்கே 'வெசாக்' தோரணங்கள் கட்டப்பட்டும் வீடுகளிலும் வீதியோரங்களிலும் பௌத்த வழிபாட்டுத் தலங்களிலும் வண்ண வண்ண வெசாக் கூடுகள் போடப்பட்டும் ஒளியேற்றப்படுகின்றது.

புத்தபகவானின் இயற்பெயர் சித்தார்த்தர் என்பதாகும். இவருடைய பிறப்பைப் பற்றி பகவத்கீதையிலும் ஏற்கனவே கூறப்பட்டிருப்பதால் இவருடைய பிறப்பு பகவானின் ஒரு அவதாரம் என்ற ரீதியில் இந்து வைஷ்ணவ மக்களும் புத்தபகவானை வழிபட்டு வருதோடு, இவ்வைகாசி விசாகத் திருநாளையும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர்.

விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk


## கேகாலையில் சாஹித்திய விழா - 2009

கேகாலை மாவட்டச் செயலாளர் பிரேமா திஸாநாயகவின் வழிகாட்டலின்பேரில் ஆரம்பிக்கப்பட்ட கேகாலை மாவட்ட தமிழ் கலாசார பேரவை, முதன் முறையாக தமிழ் சாஹித்திய விழாவை இவ்வாண்டு இறுதிக்குள் நடாத்தத் தீர்மானித்துள்ளது.

தமிழ் கலை, குறிப்பாக மலையக பாரம்பரிய கலைகளைப் பிரதிபலிக்கக்கூடியவகையில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள இவ்விழாவில், மாணவர்களை ஊக்குவிக்கக்கூடிய விதத்தில் பல சிறப்பு அம்சங்களும் இடம்பெறவுள்ளன.

இவ்விழாவை சிறப்பாக நடாத்துவதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் நல்குவதாக சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் உறுதியளித்துள்ளதாக மேற்படி கலாசார பேரவையின் பொதுச் செயலாளர் எஸ்.பி.பிரேமநாதன் தெரிவித்துள்ளார்.

## க.பொ.த (சா/தர) பரீட்சை விடைத்தாள் மீளாய்வு விண்ணப்பம் மே 10 வரை



2008 டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/தர) பரீட்சை விடைத்தாள்களை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் இம்மாதம் 10 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கான அனைத்து பெறுபேறுகளும் கடந்த மாத இறுதியளவில் வெளியிடப்பட்டு விட்டதாகவும் பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

60 DAY'S SPOKEN ENGLISH Course
தபால் மூல ஆங்கில பாடநெறி

இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
ENGLISH LANGUAGE யில் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC/SPOKEN ENGLISH அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

DIPLOMA IN ENGLISH தமிழில் ஓர் அளவு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆங்கிலம் தெரிந்த மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த பாடநெறியாகும்.

60 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும்

FREE FREE T.SHART
இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHART ஒன்று வழங்கப்படும்

இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்போர், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணர்கள் அவசர வேளைகளில் எவ்வாறு செயற்படுவது என்பதனை அறிந்திருப்பது அவசியமாகும். குறிப்பாக, நோயாளிகளை எவ்வாறு அழைத்துச் செல்வது, அவர்களுக்கு எப்படி அவசர முதலுதவிகளை வழங்குவது என்பனவற்றை நடைமுறை ரீதியில் உதாரணங்களுடன் நிகழ்த்திக் காட்டுவது அவசியமாகும்





# அவசர முதலுதவி வழங்கும் சாரணர்

## பாடசாலையில் இயங்கும் சாரணர் அமைப்புக்களை சேர்ந்த சாரணர்கள் அறிந்திருக்க வேண்டிய சில முக்கிய விடயங்கள் இங்கு தரப்படுகின்றன

### வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு முன்

கடுமையான காயங்களுடன் மயங்கிய நிலையில் இருக்கும் ஒருவருக்கு உதவ முன்வருதல் அளப்பரிய செயலாகும். இதுவொரு உயரிய பண்புமாகும். இவ்வேளைகளில், முடிந்த வரை நோயாளியுடன் அன்பாக உரையாடுதல் வேண்டும். நோயாளியின் நிலைமை அபாயகரமானதாக இருப்பின் அதுகுறித்து எடுத்துக் கூறி அவருக்கு அதிர்ச்சி ஏற்படுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். காயங்களை நன்கு கவனித்து அவரை துரிதகதியில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முயற்சிக்க வேண்டும். அதற்கு முன்னர்அவருக்குத் தேவையான முதலுதவிகளை வழங்கத் தவறக்கூடாது.

### காயப்பட்டவர் வாகனத்திற்குள் இருப்பின்

- வாகன இயந்திரத்தை நிறுத்தி விடுங்கள்.
- தலையை பின்புறம் சரித்து சுவாசிக்க இடமளியுங்கள்.
- வாகனத்திற்குள் கால்கள் சிக்கியிருப்பின் அவற்றை விடுவியுங்கள்.
- உங்களது கைகளை காயப்பட்டவரின் கைகளுக்கு அடியில் செலுத்துங்கள். அவரின் முழங்கைகளுக்கு கீழாக பலமாக பிடித்துக் கொள்ளுங்கள். காயப்பட்டவரை பிடித்து மெதுவாக வாகனத்தில் இருந்து வெளியில் எடுங்கள். மற்றுமொரு முதலுதவியாளர் அருகில் இருப்பின் காயப் பட்டவரின் கால்களை பிடித்துக் கொள்ளுமாறு கூறுங்கள். அவரை துரித கதியில் எம்பியூலன்ஸில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பி வையுங்கள்.



### கீழே விழுந்து கிடக்கின்றாராயின்

- கீழே குனிந்து இரு கைகளினால் காயப்பட்டவரின் தோள்களில் பிடித்துக் கொள்ளுங்கள்.
- அவரை அமரச் செய்ய வழிவகுக்கவும்.
- காயப்பட்டவரை அமரச் செய்ய உங்களின் முழங்கால்களில் அவரின் முதுகினை தாங்கிக் கொள்ளுங்கள்.
- காயப்பட்டவரின் அக்குள் பகுதிக்குள் கைகளைச் செலுத்தி அவரின் இடுப்புப் பகுதியின் ஊடாக வயிற்றை தாங்கிப் பிடியுங்கள். காயப்பட்டவரை தூக்கி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுங்கள்.

### நடக்க முடியாவிடின்

காயமடைந்தவரை இரண்டு கைகள் அல்லது நான்கு கைகளினால் அமைக்கப்பட்ட ஆசனத்தில் அமர்த்தி எடுத்துச் செல்வதே உத்தமம். இதற்கு முதலுதவியாளர்கள் இருவர் இருப்பது அவசியமாகும்.

- கைகளைப் பிடித்து காயமடைந்தவர் அமர ஆசனம் ஒன்றினை அமைத்துக் கொள்ளுங்கள். மூன்று கைகளினால் அமைக்கப்படும் ஆசனத்தின் முக்கியத்துவமானது காயமடைந் தவரின் முதுகுப் பகுதியைத் தாங்கிப் பிடிக்க ஒரு முதலுதவியாளரால் முடிகின்றது என்பதாகும்.
- காயமடைந்தவர் உங்கள் கைகளின் மீது அமர்ந்து கொண்ட பின்னர் அவரது கைகளினால் உங்கள் இருவரினதும் தோள் பகுதிகளைப் பிடித்துக் கொள்ளுமாறு அவரிடம் கூறுங்கள்.







### நோயாளி அடுக்குமாடியில்

நடக்க முடியாத நிலையில் இருக்கும் காயமடைந்தவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பின், அவரை அழைத்துச் செல்ல மாடிப்படிகளைக் கடக்க வேண்டியுள்ளதாயின் பின்வரும் முறை மிகவும் சிறந்ததாகும்.

- காயமடைந்தவரை கதிரையொன்றில் அமரச் செய்யுங்கள்.
- காயமடைந்தவரின் நெஞ்சுப் பகுதியை சுற்றித் துணியொன்றினால் கட்டி அதனைக் கதிரையொன்றுடன் பிணைத்துக் கொள்ளுங்கள்.
- காயமடைந்தவரின் கால்களை கதிரையின் கால்களுடன் பிணைத்துக் கட்டுங்கள்.
- முதலுதவியாளர்கள் இருவர் நோயாளியை எடுத்துச் செல்லவேண்டும்.

### காயமடைந்தவர் மயக்கமுற்றிருந்தால்

காயமடைந்தவரை அசைக்காமல் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். காயமடைதவரைத் தூக்கும் ஒவ்வொரு நடைமுறையும் முதலுதவியாளரின் ஆணையின் பிரகாரமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

- இவ்வாறானவர்களை எடுத்துச் செல்ல மூன்று முதலுதவியாளர்கள் அவசியமாகும்.
- முதலுதவியாளர்கள் மூவரும் காயமடைந்தவரின் ஒரு பக்கத்தில் வரிசையாக முழங்காலில் அமரவேண்டும். ஒரு முழங்காலில் அமருவது அவசியமாகும்.
- முதலுதவியாளர்களின் கைகள் காயமடைந்தவரின் உடலின் கீழ் வைக்கப்பட வேண்டும். ஒரு முதலுதவியாளரின் கை காயமடைந்தவரின் தலையையும் கழுத்தினையும் தாங்கிப் பிடிக்கவேண்டும்.
- காயமடைந்தவரை முதலுதவியாளர்களான உங்களின் முழங்காலுக்கு அருகில் எடுங்கள். (இதனை கவனமாக மேற்கொள்ள வேண்டியதுடன் 1, 2, 3 என எண்ணப்பட்டுச் சமிக்ஞை காட்டி தூக்குவது பொருத்தமானதாகும்)
- காயமடைந்தவரை உங்கள் பக்கம் திருப்பி வைத்துக் கொள்ளுங்கள்.
- இப்பொழுது முதலுதவியாளர்கள் மூவரும் ஒரே தடவையில் எழுந்திருக்கவேண்டும். துரித கதியில் எம்பியூலன்ஸில் ஏற்றி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் விண் ஏவுதளங்கள்




பல்வேறு கிரகங்களையும் உபகோள்களையும் ஏனைய விண்பொருட்களையும் ஆய்வு செய்வதற்காகவும் அவற்றில் தங்கி, ஆய்வுகளை மேற்கொள்வதற்காகவும் கண்காணிக்கவும் என விண்ணோடங்களும் செய்மதிகளும் விண்ணுக்கு ஏவப்படுவது நாம் அறிந்த விடயமே. ஆனால், இந்த விண்ணோடங்களையும் செய்மதிகளையும் நாம் இலகுவில் விண்ணில் ஏவி விடமுடியாது. மாறாக, இந்த விண் ஏவுகைகளை மேற்கொள்ளவென உலகில் ஏவுதளங்கள் பல நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவை குறித்த குறுகிய தகவல்களே இவை.....

| நாடு | ஏவுதளம் |
|---|---|
| பொதுநலவாய நாடுகள்/ முன்னாள் சோவியத் ஒன்றியம் | ப்ளெசெஸ் |
| பொதுநலவாய நாடுகள்/ முன்னாள் சோவியத் ஒன்றியம் | பைகனூர்/யுரேடம் |
| பொதுநலவாய நாடுகள்/ முன்னாள் சோவியத் ஒன்றியம் | கெப்யுஸ்டின் யா |
| பொதுநலவாய நாடுகள்/ முன்னாள் சோவியத் ஒன்றியம் | ஸ்வோபொட்னி |
| ஐக்கிய அமெரிக்கா | கேப் கெனவெரல் |
| ஐக்கிய அமெரிக்கா | வேன்டென்பேர்க் |
| ஐக்கிய அமெரிக்கா | வெல்லொப்ஸ் தீவுகள் |
| ஐக்கிய அமெரிக்கா | எட்வர்ட்ஸ் |
| பிரான்ஸ் | கௌரு |
| பிரான்ஸ் | ஹெம்மாகி |
| ஜப்பான் | தனெகாஷிமா |
| ஜப்பான் | கெகோஷிமா |
| சீனா | ஜியுகுவான் |
| சீனா | ஷிசேங் |
| சீனா | டாய்யுவான்/வுஸாய் |
| இத்தாலி | சென் மார்கோ ஏவுதளம் |
| இந்தியா | ஸ்ரீ ஹரிகோட்டா |
| இஸ்ரேல் | பெல்மாசிம்/யாவ்னே |
| அவுஸ்திரேலியா | வூமெரா |
| பிரேஸில் | எல்கன்டரா |
| ஸ்பெய்ன் | டொரேஜொன் |

உலகின் விண் ஏவுதளங்களின் அமைவிடம்



## 'சூரியன்' எனும் நட்சத்திரம்

சூரியனை ஒரு கோள் என்றும் அதை மையமாக வைத்தே பிற கோள்கள் சுற்றி வருகின்றன என்றும் முன்னர் கருதப்பட்டது. எனினும், நாளடைவில் மேற்கொள்ளப்பட்ட அறிவியல் ஆய்வுகள்,



சூரியனை மிகவும் பிரகாசமான-மிகப் பெரிய நட்சத்திரமெனக் குறிப்பிட்டது.

மேலும், பூமிக்கு அப்பாலுள்ள கோள்களும் நட்சத்திரங்களும் பூமி மீது அவை செலுத்தும் தாக்கத்தை வைத்தே, எவ்வளவு தொலைவில் இருக்கின்றன என்பதைக் கணக்கிடுகிறார்கள். இந்தக் கணக்கின்படி, பிரபஞ்சத்தில் பரவிக் கிடக்கும் நட்சத்திரங்களில் பூமிக்கு மிக அருகிலுள்ள நட்சத்திரம் சூரியன்தான் என குறிப்பிட்டுள்ளனர்.

## செய்மதி ஏவுகையின் ஆரம்பம்


**புவியில் நாம் எங்கு சென்றாலும் எம்மைக் கண்காணிப்பதற்கு சில கண்கள் இருக்கின்றன. புவிக்கு அப்பால் விண்வெளியில் வலம் வரும் செய்மதிகள் தான் அவை. பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செய்மதிகள் ஏவப்படுவது பற்றி பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றது. விண்ணில் ஏவப்படும் இந்த செய்மதிகள், எமக்கு எட்டாத தொலைவுக்குச் சென்று அப்படி என்னதான் செய்கின்றன? என்பது குறித்து சற்று விரிவாகப் பார்ப்போம்!**

செய்மதிகள் (செயற்கைக் கோள்கள்) ஏவப்படுவதன் பிரதான நோக்கம் விண்ணிலிருந்தவாறு புவியை பல்வேறு கோணங்களில் நோக்குவதேயாகும். புவியின் மேற்பரப்புக்களை ஒரே பார்வையில் கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் மிகவும் உதவி புரிவது இந்த செய்மதிகளே. இதன்மூலம் வானிலை மற்றும் காலநிலை எதிர்வு கூறல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

1960 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அனுப்பப்பட்ட 'Tiros 1' என்ற அமெரிக்க வானிலை ஆய்வு செய்மதியானது, புவியின் பல பகுதிகளினதும் படங்களைப் பிடித்து அனுப்பியது. எனினும், 1972 ஆம் ஆண்டு நாஸாவினால் ஏவப்பட்ட 'ERTS 1' என்ற செயற்கைக்கோள்தான் புவியின் பெரும்பாலான பகுதிகளைப் படம் பிடிக்கக்கூடியவாறு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் மறு பெயர் Landsat 1 என்பதாகும். இது புவியின் வட மற்றும் தென் துருவங்களுக்கு மேலாகப் பயணித்தது. இதன் விளைவாக புவியின் பெரும்பாலான இடங்களை இச்செய்மதியினால் கண்காணிக்க முடிந்தது. கட்புல ஒலி அலைகளை மட்டுமன்றி, ஏனைய அலை நிறங்களையும் பதிவு செய்யும் ஆற்றல் இதற்கிருந்தது.

அமெரிக்காவின் 'Landsat' செயற்கைக்கோள் அடைந்த வெற்றி, ஏனைய நாடுகளையும் ஊக்குவித்தது. அதன்படி, 1986 ஆம் ஆண்டு தொடக்கம் பிரான்ஸ் 'Spot' என்ற பெயரில் தொடரான செய்மதிகளை விண்ணுக்கேவியது. 1987 முதல் ஜப்பான் Mos-1A எனும் செய்மதியையும் 1988 முதல் இந்தியா IRS-ISA எனும் செய்மதியையும் ஏவியது. இதனை அடுத்து, நாட்டுக்கு நாடு செய்மதிகளை ஏவுவதில் ஒரு போட்டிநிலை ஏற்பட்டது எனலாம். அந்தளவுக்கு செய்மதிகள் விண்ணில் வலம் வரத் தொடங்கின.

உளவு, வானிலை ஆய்வு, தகவல் தொடர்பு, இயற்கை அழிவுகள் என பல்வேறு தேவைகளுக்காகவும் முன்னெச்சரிக்கை சமிக்ஞைகளுக்காகவும் விண்ணில் செய்மதிகள் ஏவப்படலாயின. இதே வேளை, குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காகவும் குறித்த சில காலவரையறையுடையதாகவும் செலுத்தப்பட்ட செய்மதிகள், தற்போது செயல் இழந்த நிலையில் விண்வெளியில் விண்வெளிக் கழிவுகளாக வலம் வந்து கொண்டிருக்கின்றன.ஆக, இந்த விண்வெளிக் கழிவுகளினால் எதிர்காலத்தில் புவிக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படலாம் என்றும் பல விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.



Landsat 1 செய்மதி



Tiros 1 செய்மதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுவிட்டு நாடு செல்லும்



**ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு மக்கள் உல்லாசப் பயணிகளாகச் செல்கின்றனர். வருடந்தோறும் உல்லாசப் பயணிகள் லட்சக்கணக்கில் எமது நாட்டுக்கும் வந்து போகின்றனர்.அதேபோன்று பறவைகளும் ஒரு நிலப்பிரதேசத்தில் இருந்து அப்பகுதியை விட்டு இன்னொரு நாட்டிற்குச் சென்று அங்கு தங்கியிருந்து மீண்டும் தமது இருப்பிடம் வருகின்றன**

## பறவைகள் இடம்பெயரக் காரணம்?

செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகும்போது பல நாடுகளின் காலநிலைகளில் மாற்றம் நிகழ்கின்றது. மாரிகாலம், இலையுதிர்காலம், குளிர்காலம் என்று இந்தப் பருவகால மாற்றம் நிகழ்கின்றது.இவ்வாறான பருவகால மாற்றத்தில் குறிப்பாக இலையுதிர் காலத்தில் பறவைகளுக்கு சில நாடுகளில் வாழ்க்கை கஷ்டமாக அமைகின்றது.இதில் கடுமையான உணவுப்பற்றாக்குறை முக்கிய விடயமாகும்.அவ்வாறே,குளிர்காலத்தில் பனிமழை பொழியும் பருவத்தில் இந்த உணவுப் பற்றாக்குறை மேலும் உக்கிரமடைகின்றது.

அத்தோடு, இக்காலத்தில் புவி உஷ்ணம் குறைவடைந்து சூரிய ஒளி கூட புவியில் தென்படாத நிலை (18 மணித்தியாலங்களுக்கு மேல்) ஏற்படுவதால் இக்காலத்தில் அநேகமாக ஐரோப்பிய நாடுகளில் வாழும் பறவைகள் அப்பகுதியை விட்டு வெளியேறி வேறு நாடுகளுக்குச் சென்று விடுகின்றன.இவ்வாறு செல்லும் பறவைகள் நீண்ட நாட்களுக்கு உஷ்ண வலய நாடுகளில் தங்கியிருக்கின்றன.


## இடம் பெயரும் முறைகள்

இவ்வாறு குளிர்வலய நாடுகளில் இருந்து உஷ்ண வலய நாடுகளுக்கு பறவைகள் இடம்பெயர்வது ஓர் ஒழுங்கு முறையிலேயே நிகழ்கின்றன. ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஆபிரிக்காவுக்கும் வட ஆசியாவின் பறவைகள் தென் ஆசியாவுக்கும் மத்திய ஆசியப் பிராந்தியத்தில் இருந்து இலங்கைக்குமாக பறவைகளின் இடம் பெயர்வுகள் நடைபெறுகின்றன. மத்திய ஆசிய மற்றும் இந்தியாவுக்கான இடம் பெயர்வுப் பாதையாக இலங்கை அமைகின்றது.

## இலங்கை வரும் பறவைகள்

மத்திய ஆசியா மற்றும் இந்தியா வழியாக வரும் பறவைகள் இந்தியாவில் தங்கிவிடுகின்றன. எவ்வாறாயினும், வருடம் முழுவதும் 150 வகையான பறவைகள் இலங்கைக்கு வருகின்றன. இந்தியாவில் உலா வருகின்ற பறவைகளிலும் 75 வகையான பறவைகள் எமது நாட்டுக்கு வந்துபோகின்றன.

## இலங்கைக்கு பறவைகள் வரும் மார்க்கம்




## நாம் காணும் பறவைகள்

இவ்வாறு இடம் பெயர்ந்து வரும் பறவைகளில் சிலவற்றை நாம் அடிக்கடி காணமுடிகின்றது. அவை வெள்ளைத்துணித் திருடன் (சுதுரெதிஹொரா) அச்சியா, வஹிலிஹினா, கடல் வானம்பாடி, சொட்டில் வெள்ளைக் கொக்கு, அன்னம் போன்றன இவ்வகைப் பறவைகளாகும். இவை அநேகமாக சிங்கள மொழிப் பெயர்களிலேயே அழைக்கப்படுகின்றன.

### நிவஹிலிஹினியா (Hirundo rustica)

இது வெள்ளை மற்றும் நீல நிறம் கலந்த கறுப்பு நிறப் பறவையாகும். தலையில் ரோமம் இரண்டு பகுதியாகப் பிரிந்த அழகிய தோற்றம் கொண்டது. இவ்வகைப் பறவைகள் ஐரோப்பாவில் இருந்து எமது நாட்டுக்கு வருகின்றன. செப்டெம்பர், ஏப்ரல் மாதங்களில் எமது நாட்டின் பல பகுதிகளில் இவ்வகைப் பறவைகளைக் காண முடிகின்றது. ஆங்காங்கே பறந்து திரிந்து பூச்சி புழுக்களை இவை இரை யாகப் பிடித்துச் சாப்பிடுகின்றன. இலங்கையில் இருந்து செல்லும் காலம் நெருங்கும்போது கழுத்தில் இருந்து நீண்டதாக சிறகுகள் வளர்கின்றன.



### வெள்ளைத்துணித் திருடன் (Terpsiphone paradisi)

தலையில் கொண்டையும் தலை கறுப்பு நிறத்திலும் உடல் பகுதி வெள்ளை நிறமாகவும் வால் (சிறகு) நீண்டதாகவும் காணப்படுகின்றது. பெண் குருவி தலையில் பூ போன்ற கொண்டையுடன் கறுப்பு நிறத்தலை உடையதாகவும் சிறகு ஓரளவுக்கு இளமஞ்சள் நிறமாகவும் சொண்டு கட்டையாகவும் காணப்படுகின்றது. பூச்சி புழுக்களே இதன் முக்கிய உணவாகும். எமது நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பறந்து திரியும் இவ்வகைப் பறவைகள் வட இந்தியாவில் இருந்து இங்கு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ம் உல்லாசப் பறவைகள்

## அச்சியா (Pitta brachyura)



இலங்கை வருகின்ற பறவைகளில் மிகவும் அழகான கண்கவர் வர்ணப் பறவை இதுவாகும். இந்தியாவின் இமய மலைப்பிரதேசத்தில் இருந்து இவை இங்கு வருகின்றன. நீலம், பச்சை, மஞ்சள், வெள்ளை, கறுப்பு ஆகிய நிறங்கள் கலந்து அழகாக உள்ள இப்பறவைகளை இலங்கையின் எப்பகுதியிலும் காணலாம். இதனைக் 'காடை' என்றும் அழைப்பதுண்டு. இவை இருள் சூழ்ந்த பற்றைக்காடுகளுக்குள்தான் அதிகம் காணப்படுகின்றன. பூச்சி, புழுக்கள், நுண்ணுயிர்கள் இப்பறவைகளின் பிரதான இரையாகும். நிலத்தில் பாய்ந்து பாய்ந்து நடக்கும் காட்சி தனி அழகானதாகும். எப்போதும் அமைதியை நாடும் ஒரு பறவை இனம் இதுவாகும்.

## வளைவுமுகக் கொக்கு (Childonias hybridus)



இப்பறவை வட இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகின்றது. உடம்பில் வெள்ளை கலந்த சாம்பல் நிறம் கொண்ட இப்பறவை கரையோரப் பகுதிகள், கலப்பு, நீர் நிலைகள் போன்ற இடங்களையே அதிகம் நாடுகின்றன. மின் இணைப்புக் கம்பிகளிலும் இலை உதிர்ந்த மரங்களிலும் அதிக நேரத்தைக் கூட்டமாகக் கழிக்கும் இப்பறவை பார்வைக்கு அழகான தோற்றமுடையதாகும். இலங்கையில் இருந்து மீண்டும் நாடு திரும்பும் காலம் வரும்போது இதன் நிறம் கறுப்பாக மாற்றமடைவதோடு முகம் மட்டும் வெள்ளையாக இருக்கும்.

## நாரை இனக்கொக்கு

இவ்வினப் பறவைகளில் இரண்டு வகைகள் உள்ளன. அவை சதுப்பு நிலங்களை அண்டிய இடங்களில் இரை தேடுபவைகளாகவும், நீர் நிலைகளில் வாழக்கூடியவைகளாகவும் உள்ளன. வடஆசியா 'ஆர்க்டிக்' துருவப் பகுதிகளில் இருந்து பனிபடர் காலத்தில் இங்கு வருகின்றன. பெரும்பாலும் கடற்கரையை அண்டிய பகுதிகள், 'கலப்பு' போன்ற இடங்களையே அதிகம் நடமாட இவை தேர்ந்தெடுக்கின்றன.



## வனஹெலபென்தா (Dendronanthus Indicus)



ஓரளவு சிறிய குருவி இனம். நடக்கும்போது ஓரளவு அவதானமாக அவசர அவசரமாக அடி எடுத்து வைக்கக்கூடியது. தூக்கணாங்குருவி இனத்தை ஒத்ததாகவே இது காட்சி தருகின்றது. வட ஆசியாவில் இருந்து இங்கு வரும் இப்பறவை வெள்ளை, ஊதா, கறுப்பு நிறங்களை உடையதாக காட்சி தருகின்றது. பூச்சி, புழுக்கள் மற்றும் சிறிய நுண்ணுயிர்கள் இப்பறவையின் பிரியமான இரையாகும்.

## புலம் பெயரும் காலத்தை அறிந்துகொள்ளல்

துருவப் பிரதேச நாடுகளில் பனி படர்ந்து காலநிலை குளிர்ச்சியடையும்போது வானம் இருண்டே காட்சி தருகின்றது. அப்போது, பகல் வேளை குறைவடைந்து இரவு நேரம் அதிகரிக்கின்றது. சிறிதளவு சூரிய ஒளியும் பிரகாசமும் இருந்தாலும் பிற்பகல் இரண்டு மணியாகும் போது இருள் சூழ்ந்து இரவாகி விடுகின்றது. இக்காலப் பகுதியில் அப்பிரதேசத்தில் வாழும் பறவைகள் அப்பகுதிகளை விட்டு இடம்பெயர்ந்து பொருத்தமான பிற பிரதேசங்களுக்கு செல்லத் தீர்மானித்து விடுகின்றன.

## இருப்பிடம் திரும்புதல்

ஏப்ரல் மாதத்தில் மரங்கள் பூத்துக்குலுங்கி எங்கும் பிரகாசமாகவும் மனோரம்யமான சூழலும் உருவாகின்றபோது இப்பறவைகள் தமது தாய்நாட்டுக்குத் திரும்பவேண்டிய காலம் வந்துவிட்டதை உணர்கின்றன. தமது நாட்டுக்குத் திரும்பியவுடன் அங்கு காலநிலை சீரடைந்து பிரகாசமான மாரிகாலம் உதயமாகும்போது முட்டை இட்டு அடைகாக்க ஆரம்பித்து விடுகின்றன. ஆனாலும், துருவப் பகுதிப் பறவைகள் மிகவும் அபூர்வமாகவே முட்டை இட்டு அடைகாக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளன.

இலங்கைக்குள் நுழையும் பறவைகள் கிழக்குக் கரையோரம் ஊடாகப் பொருத்தமான இடங்களைத்தேடிச் செல்கின்றன. இமயமலைப் பகுதிக்கு மேற்கில் இருந்து வரும் பறவைகள் இந்து நதி ஊடாகவும் அங்கிருந்து இந்தியாவின் மேற்குக் கரை மார்க்கமாகவும் இலங்கைக்குள் பிரவேசிக்கின்றன. இன்னும் சில பறவைகள் தென் இந்தியா வழியாக மன்னார் பகுதிக்குள் நுழைகின்றன. ஆனாலும், வேகமாகப் பறக்கும் ஆற்றல் உள்ள பறவைகள் நீண்ட கடல் வழிப் பிரயாணத்தின் மூலம் மேற்குக் கரைப்பிரதேசத்திற்குள் நுழைகின்றன.

## பயணப்பாதையை கண்டறிதல்

இடம்பெயரும் பறவைகள் எப்போதும் பூமத்திய ரேகையின் அமைவையே வழிகாட்டும் பாதையாகத் தேர்ந்தெடுக்கின்றன. அத்தோடு, காலத்திற்கு காலம் இடம்பெயர்வதால் கிடைக்கும் அனுபவமும் மேலும் துணையாக அமைகின்றது. பூகோள அமைவிடம், அடையாளங்கள் மூலமும் இப்பறவைகள் பறக்க வேண்டிய திசையை அறிந்து கொள்கின்றன. அதேபோன்று இவ்வாறு இடம்பெயர்ந்துவரும் பறவைகள் ஒவ்வொரு வருடமும் உறைவிடம் அமைப்பதற்கு ஒரே இடத்தையே தேர்ந்தெடுப்பதாகவும் முன்னைய இடத்தை நினைவில் வைத்து அந்த இடத்திற்கே திரும்பி வருவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

**அமீர் ஹுசைன்**

## உச்சி வெள்ளை வாத்து (Amas Querquedula)

இந்த வாத்துக்கள் கூட்டமாக சைபீரியாவில் இருந்து இலங்கை வருகின்றன. இலங்கையில் உலர்வலயப் பகுதிகளில் உல்லாசமாக காலம் கடத்துவதில் இவை அதிக ஆர்வம் காட்டுகின்றன. இதன் உச்சந்தலை வெள்ளை நிறத்தில் காட்சி தருகின்றது. ஊதா நிறமுடைய இவ்வகை வாத்துக்கள் இலங்கையில் இருந்து புறப்படும் காலம் நெருங்கும்போது இறக்கைகள் வெள்ளை நிறமாகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வரலாற்றின் பொற்காலம்



### தரம்-10 மாணவர்களின் வரலாறு பாடத்திட்டத்திற்கு உட்பட்டது

**வட இந்தியாவில் மௌரியர்களை அடுத்து, ஆட்சிக்கு வந்த குஷாணர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர், ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் வட இந்தியாவில் பலம் மிக்க ஓர் அரசு ஏற்படவில்லை. கி.பி நான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், சிரீ குப்தர் என்பவர் பாடலிபுத்திரத்தில் ஒரு சிறிய அரசை அமைத்தார். இவரே குப்த மரபைத் தோற்றுவித்தவர் என்று கருதப்படுகின்றது.**


குப்த பேரரசின் பரவல்

குப்தர்கள் ஏறக்குறைய 200 ஆண்டுகள் வட இந்தியாவை ஆண்டனர். குப்தர்களின் ஆட்சியில் அரசியல், கல்வி, பொருளாதார வளர்ச்சி உட்பட எல்லா நிலைகளி லும் மிகச் சிறந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டன. எனவே, குப்தர்களின் காலம் இந்திய வரலாற்றின் 'பொற் காலம்' என வர்ணிக்கப்படுகின்றது.

### குப்தர்களின் வரலாற்றை அறியப் பயன்படும் மூலாதாரங்கள்

1. இலக்கியங்கள்
2. தொல்பொருள் மூலாதாரங்கள்

i. பதினெட்டுப் புராணங்கள்
ii. பாஹியன் குறிப்புகள்
iii. காளிதாசர் இலக்கியங்கள்
vi. சமுத்திரகுப்தரின் அலஹபாத் கற்றூண்
v. நாணயங்கள்


தொல்பொருள் ஆய்வுகள்

### குப்தர் அரச வம்சத்தின் சில முக்கிய அரசர்கள்

**முதலாம் சந்திரகுப்தர் (கி.பி 320-330)**

குப்தர் மரபில் குறிப்பிடத்தக்கவர் முதலாம் சந்திரகுப்தர் ஆவார். அவர் 'மகா ராசாதிராசா' என்ற பட்டப் பெயரினைச் சூட்டிக் கொண்டார். கி.பி 319-320 ஆம் ஆண்டுகளில் 'குப்த சகாப்தம்' எனப்படும் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினார். இவர் லிச்சாவியின் இளவரசியான குமார தேவியை மணந்தார். அத்திருமணம் சந்திரகுப்தரின் நிலையை மேலும் வலுப்படுத்தியது. இவரது ஆட்சியில் மகதம், அலஹபாத், அயோத்தி ஆகிய நகரங்கள் இவரது பேரரசுடன் இணைக் கப்பட்டன.

**சமுத்திரகுப்தர் (கி.பி 330-380)**

முதலாம் சந்திரகுப்தரைத் தொடர்ந்து, ஆட்சிக்கு வந்த அவரது மகனான சமுத் திரகுப்தர், தனது தந்தையின் புகழை மேலும் ஓங்கச் செய்தார். இவரின் படைத் தளபதியான 'அரிசேனா' என்பவர், தன் அரசரின் வெற்றிகளை அலஹபாத் கற்றூண்களில் விபரித்துள் ளார். சமுத்திரகுப்தர் தன் ராச்சியத்தை விரிவுபடுத்தும் நோக்கில், கங்கை நதிக் கரையில் அமைந்திருந்த 9 நகரங்களை தன் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். அதன்பின் தெற்கு நோக்கிப் படையெடுப்புக்களை நடத்தினார். 'விந்திய' மலைப்பகுதியில் அமைந்த காடுகள் நிறைந்த பல பிரதே சங்களையும் கைப்பற்றினார்.அத்துடன், இந்தியாவின் தென் பகுதியை ஆண்ட 12 அரசுகளையும் வெற்றி கொண்டதா கவும் கூறப்படுகின்றது. இவர் காஞ்சி புரம் வரை வந்து, அங்கிருந்த பல்லவ அரசனையும் சிறைப்பிடித்துள்ளார். பின்பு மேற்குக் கடற்கரை வழியாக பாடலிபுத்திரம் திரும்பினார். இவரது தொடர்ச்சியான வெற்றிகளின் காரண மாக, வரலாற்றாசிரியர் ஒருவர் 'இந்தியாவின் நெப்போலியன்' என இவரை வர்ணித்துள்ளார்.

சமுத்திரகுப்தர் ஏனைய மதங் களையும் மதித்தார். இவர் வெளியிட்ட நாணயங்கள் அவரது புகழையும் நாட்டின் செல்வநிலையையும் எடுத்துக் காட்டுகின்றன. இவர் ஓர் இசைப் பிரியராகவும் இருந்துள்ளார். பாடல்கள் இயற்றுவதிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்.

**இரண்டாம் சந்திரகுப்தர் (கி.பி 380-415)**

இவர் சமுத்திரகுப்தரின் மகனாவார். பல அண்டைய ராச்சியங்களுடன் மேற்கொண்ட திருமண உறவுகள்மூலம் பேரரசை மேலும் விரிவுபடுத்தினார். 'குபேரநாகா' என்கின்ற நாக குலத்தைச் சேர்ந்த இளவரசியையும் மணந்து கொண்டார். 'சாகர்கள்' எனும் இனத்த வரை வெற்றிகொண்டு, குஜராத் பகுதி யைக் கைப்பற்றியதால் அவருக்கு 'சாகரி' என்ற பட்டப்பெயர் கிடைத்தது. உஜ்ஜைனி என்கின்ற நகரத்தை தனது இரண்டாவது தலைநகரமாக ஆக்கிக் கொண்டார்.இவருக்கு 'விக்ரமாதித்யன்' என்ற மற்றொரு பட்டப்பெயரும் உண்டு. அவரது சபையில் காளிதாசர், அமரசிம்மன் ஆகிய புகழ்பெற்ற அறிஞர்கள் இருந்தனர்.

சீனப் பயணியாகிய பாஹியன் என்பவர் இவரு டைய காலத்தில் இந்தியா வுக்கு வந்திருந்தார். சந்திர குப்தரின் அவையில் பாஹியன் சில காலம் தங்கி இருந்தார். இவர் குப்தரின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் நிலை பற்றி மிக நீண்ட விரிவான குறிப்புகளை எழுதியுள்ளார். தவிர, அரேபிய வணிகர் சுலைமான், வெனிஸ் நகரப் பயணி மார்கோ போலோ ஆகியோரும் இவர் ஒரு சிறந்த அரசர் எனக் குறிப்பிட்டு, பல குறிப்புகளை எழுதியுள்ளனர். இவரது இரண்டாவது மகனான குமார குப்தர் சிறந்த அறிஞராவார். புகழ் பெற்ற 'நாலாந்தா' பல்கலைக்கழகத்தைத் தொடங்கியவர் இவராவார்.


அலஹபாத் கற்றூண்


குப்தர் கால புத்தர் சிற்பத்தின் தலைப்பகுதி


இரண்டாம் சந்திர குப்தர்கால நாணயம்


ஸ்கந்த குப்தர் கால நாணயம்

**ஸ்கந்த குப்தர் (கி.பி 456-468)**

இவருடைய காலத்தில் குப்த ராச்சியத்துக்கு மத்திய ஆசியாவிலிருந்து வந்த யூணர் களால் ஆபத்து நிலை ஏற்பட்டது. ஸ்கந்த குப்தர் யூணர்களை விரட்டியடித் தாலும் அவர்களுடன் நடத்திய போர்களினால் குப்த அரசு பெரிதும் பாதிப்புக்குள்ளானது. அதேநேரம் குப்தர்களுக்கு உள்நாட்டுக் கலவரங்களையும் எதிர்கொள்ள வேண்டியநிலை ஏற்பட்டது.எனவே,இவருடைய காலத்தில் குப்த பேரரசு சிதைவுற்று, பல பிரிவுகளாகப் பிரிந்தது. **-எஸ்.எம்.எம்.ஹரீஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறியாத நிலையில் பார்வையை இழக்க வைக்கும் 'குளுகோமா'



பாடசாலைக்கு வந்த கமலினி தனது சிநேகிதி சாந்தியைப் பார்த்து "இன்றைக்கு பஸ்ஸில் ஏறும்போது ஒரு விஷயம் நடந்தது தெரியுமா?" என்று கூறினாள்.

"என்ன நடந்தது?" சாந்தினி ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"எனக்கு முன்னால் ஒரு தாத்தா இருந்தார். அவருக்கு 65 வயது இருக்கும். அவர் பஸ்ஸில் ஏறப்போகும்போது விழுந்துவிட்டார்"

"ஏன் அப்படி நடந்தது?" சாந்தி வியப்புடன் கேட்டாள்.

"அவர் பஸ்ஸின் படியைக் காணவில்லை என்று சொன்னார். அவருக்கு ஒருபுறம் மட்டும்தான் தெரியுமாம். அவர் பார்க்கும் பக்கத்தில் ஒரு பகுதி மட்டும் தெரியுமாம்"

"அப்படியென்றால் அந்த தாத்தாவுக்கு குளுகோமா நோய் இருக்குமோ?" சாந்தி கேட்டாள்.


"அதென்ன சாந்தி குளுகோமா என்றால்?"

"அது ஒரு கண் நோய். ஆனால், அந்த நோய் வந்தால் அதை அறிந்து கொள்ள முடியாமலேயே கண் குருடாகி விடுமாம். குளுகோமாவைப் பற்றிய கட்டுரை ஒன்று என்னிடம் இருக்கின்றது. வாசித்துப் பார்ப்போமா?"

## கண்ணின் அழுத்தம்

குளுகோமா என்னும் சொல் எமக்கு பரிச்சயமானதல்ல.எனவே,குளுகோமா என்பதைவிட 'கண்ணின் அதிக அழுத்தம்' என்றே இந்த நோயைக் கூறவேண்டும்.





## குளுகோமாவை அறிந்து கொள்வது எப்படி?

துரதிஷ்டவசமாக ஆரம்ப கட்டத்தில் இந்த நோயின் அறிகுறிகள் தென்படுவதில்லை. எனவே, கண் பரிசோதனை மூலம் மட்டுமே அதனை ஆரம்பகட்டத்தில் அடையாளம் காணமுடியும்.

## இந்த நோய் யாரைத் தாக்கக்கூடும்?

இந்த நோய் எதனால் ஏற்படுகின்றது என்று சரியாக எடுத்துக் கூற முடியாதுள்ளது. பரிசோதனை ஒன்றின் மூலமே நோய் தாக்கியிருப்பதை சரியாக அறிந்து கொள்ளமுடியும். சிறு குழந்தைகளுக்கோ அல்லது இளைஞர்களுக்கோ இந்த நோய் ஏற்பட்டதற்கான தகவல்கள் இல்லை.

## குறிப்பாக நோய் யாரைத் தாக்கக்கூடும்?

- 60 வயதைத் தாண்டியவர்களுக்கு.
- நோயாளரின் இரத்த உறவுக்காரருக்கு.
- இளம் வயது முதல் கனமான வில்லையுள்ள மூக்குக் கண்ணாடி அணிந்தவர்களுக்கு.
- நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு.
- கண்ணில் காயம் அல்லது தகர்ப்பு ஏற்பட்டவர்களுக்கு

இவ்வாறானவர்களுக்கு இந்த வியாதி ஏற்படலாம். 40 வயதைத் தாண்டியவுடன் இரண்டு மூன்று வருடத்திற்கு ஒரு முறையாவது கண்களைப் பரிசோதித்துக் கொள்வதே நன்மை பயக்கும் வைத்திய முன்னெச்சரிக்கை முறையாகும்.

## நோயாளர்கள்

உலகம் முழுவதிலும் 4%-5% வரையிலும், இலங்கையில் 10%-15% வரையிலுமான மக்கள் குளுகோமா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. 2020 ஆம் ஆண்டு உலகில் 8.4 மில்லியன் பேர் குளுகோமா நோயாளர்களாக இருப்பர் என மதிப்பிடப் பட்டுள்ளது.

## சிகிச்சை உண்டா?

இந்நோய் இருப்பதாக பலருக்குத் தெரிய வருவது அரிது. எனவே, நோய் அதிகரித்து கண்பார்வை இழக்கப்படும் சந்தர்ப்பம் அதிகமாகவே உள்ளது. இந்த நோய் ஏற்பட்டால் அதனைக் குணப்படுத்த முடியாது. எனினும், முன்கூட்டிய வைத்தியப் பரிசோதனைகள் மூலம் அதனைக் கட்டுப்படுத்தி நிலைமையை சீர்செய்து கொள்ளமுடியும்.

சொட்டு மருந்துமுறை மற்றும் சத்திரசிகிச்சை முறை மூலம் இந்நோய்க்கு சிகிச்சையளிக்கப்படும். தற்போது இலங்கையில் அநேகமாக சகல மருத்துவமனைகளிலும் மருத்துவ நிபுணர்கள் இலவசமாக சிகிச்சையளித்து வருகிறார்கள். அங்கு சகல மருந்து வகைகளும் வழங்கப்படுவதால் இந்நோயில் இருந்து கண்களை பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

## கண் பரிசோதனையை மேற்கொள்வது எவ்வாறு?

இதற்காக அனுபவமுள்ள கண் மருத்துவரிடம் சென்று கண்களைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். மருத்துவர் கண்ணின் அழுத்தத்தை குளுகோமாவை பரீட்சித்துப் பார்ப்பார். அதன் பிரகாரம் கீழ்கண்டவாறு கண்கள் வகைப்படுத்தப்படும்.

### சாதாரண கண்

கண்ணின் அழுத்தம் 21 மில்லிமீற்றர் பாதரசத்தை விடக் குறைவாக இருக்கும்போது கண்ணின் நரம்பில் குளுகோமா மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதுடன், கண் சாதாரண நிலையில் உள்ளது என்பதையும் அறியமுடியும். எனினும், இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒருமுறை கண்களை பரிசோதித்துக் கொள்வது நல்லது.

### குளுகோமா சந்தேகம் உள்ளவர்கள்


இவர்களின் கண் அழுத்தம் 22 மில்லிமீற்றருக்கும் 26 மில்லிமீற்றருக்கும் இடைப்பட்டதாக இருக்கும். கண் நரம்பில் குளுகோமா மாற்றங்கள் ஏற்பட்டும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். இவ்வாறானவர்களைத் தொடர்ந்தும் பரிசோதிக்க வேண்டும். 'ஸ்கேன்' பரிசோதனை (OCT/GDX) கண்பார்வைக் கோணத்தை (Visual fields) அளந்து அறிதல் மற்றும் கண் மணியின் கனம் (OCT) ஆகியவற்றை அளந்தறிய வேண்டும். குளுகோமா இல்லை என்று தென்பட்டாலும் 6 மாதங்களுக்கு ஒருமுறை கண்கள் பரிசோதிக்கப்பட வேண்டும்.

### குளுகோமா உள்ள கண்

இவர்களின் கண் அழுத்தம் மில்லிமீற்றர் 22 பாதரசத்தை விட அதிகமாக இருக்கும். கண்ணின் நரம்பில் குளுகோமா மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கும். இவர்கள் நோயாளர்களாக கருதப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட வேண்டியவர்களாவர். இவர்கள் குறிப்பிட்ட சிகிச்சைத் தினங்களில் தவறாது மருத்துவரைச் சந்திப்பது மிக அவசியமானதாகும்.

## அறிந்துகொள்ள வேண்டியவை

நோய்க்கு சிகிச்சை பெற்று வருபவர்கள் உரிய முறையில் மருந்தை எடுப்பதன் மூலம் கண்களைப் பாதுகாத்துக் கொண்டு நோயை விரட்டி விட முடியும். குளுகோமா அற்ற எதிர்கால சந்ததியை உருவாக்குவதும் அப்போது கஷ்டமாகாது. இந்நோயினால் ஏற்படும் கண் பார்வையற்ற தன்மையானது தடுக்கக்கூடியதே.




கண்பார்வை படிப்படியாக குறையும் விதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நகரம் - யேரெவன்


நாடாளுமன்றம்

# ஆர்மேனியா


தேசிய இலச்சினை



**அரசாங்கம்:** குடியரசு (Republic of Armenia)

**நிலையம்:** வடக்கில் ஜோர்ஜியாவும் கிழக்கில் அசெர்பய்ஜானும் தெற்கு மற்றும் மேற்கில் துருக்கி மற்றும் ஈரான் ஆகிய நாடுகளும் எல்லைகளாக அமைந்துள்ளன.

## நிறுவப்பட்டதும் சுதந்திரமும்

ரோமன், பைஸாண்டியன், அரபு, பேர்ஜியன் மற்றும் ஒட்டோமன் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது.1828 இல் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டது. 1991 இல் சோவியத் சமவுடமைக் கூட்டுக் குடியரசின் சிதறலை அடுத்து, சுதந்திரம் பெற்றது.

**ஆர்மேனிய பேரரசு நிறுவப்பட்டது:** கி.மு 190

**ஆர்மேனிய ஜனநாயகக் குடியரசு நிறுவப்பட்டது:** 1918 மே 28

*** சோவியத் யூனியனிடம் இருந்து சுதந்திரப் பிரகடனம்:** 23 ஓகஸ்ட் 1990

*** உறுதிப்படுத்தப்பட்டது:** 21 செப்டெம்பர் 1991 (தேசிய விடுமுறை தினம் - சுதந்திர தினம்)



*** நிறைவெய்தியது:** 25டிசம்பர் 1991

**அதிபர்:** செர்ஸ் சர்கிஸ்யன் (Serzh Sarkisyan)

**பிரதமர்:** டைக்ரன் சர்கிஸ்யன் (Tigran Sarkisyan)

**தலைநகர்:** யேரெவன் - (Yerevan),

**பெரிய நகரம்:** யேரெவன்,

**ஏனைய பெரும் நகரங்கள்:** வெனட்சோர் (Vanadzor), கையும்ரி (Gyumri), எபோவியன் (Abovian)

## தரைத்தோற்றம்

மடிப்பு மலைகளையும் எரிமலைகளையும் கொண்ட ஆர்மேனியா நாட்டிலுள்ள மடிப்பு மலைகளின் சராசரி உயரம் 1,800 மீற்றர் ஆகும். அத்துடன், இங்கு 3,048 மீற்றருக்கு மேற்பட்ட உயரமுடைய மலைகளும் காணப்படுகின்றன.

**உயரமான மலை:** 'அரகாட்ஸ்'.மலை (Mount Aragats) 4095 மீற்றர்.

**பிரதான நதி:** அராக்ஸ்(Araks),

**ஏனைய நதிகளாவன;** அகுரியன், காஸாக், ரஸ்டான்,அஸாட்,ஆர்பா,

**பிரதான ஏரி:** சேவான். நதிகளும் ஏரிகளும் மீன்பிடிக் கைத்தொழிலுக்கும் மின்சார உற்பத்திக்கும் பெரிதும் துணை புரிகின்றன.


ஜனாதிபதி


பிரதமர்

## காலநிலை

கண்டக் காலநிலையும் குளிர் காலநிலையும் நிலவுவதோடு, சுட்டெரிக்கும் வறண்ட மாரிகாலத்தையும் புழுதி மிகுந்த வசந்த காலத்தையும் கொண்டது.

**மொத்த நிலப்பரப்பு:** 11,506 சதுர மைல் (29,800 ச.கி.மீற்றர்)

**உத்தேச சனத்தொகை (2008):** 2,968,586, சனத்தொகை வளர்ச்சி வீதம் - 0.1%, பிறப்பு வீதம் 12.5/1000, சிசு மரணம் 20.9/1000, எதிர்பார்க்கும் ஆயுட்காலம் 72.4.

**மொழிகள்:** ஆர்மேனியன் 98% (உத்தியோகபூர்வ மொழி),யெஸிடி, ரஷ்யமொழி,

**இனங்கள்:** ஆர்மேனியன் 97.9%, ரஷ்யர் 0.5%, குர்திஸ் 1.3%, ஏனையோர் 0.3%,

**சமயம்:** ஆர்மேனியன் அபோஸ்தலிக் (கிறிஸ்தவம்) - 95%, ஏனைய கிறிஸ்தவர்கள் - 4%, யெஸிடி - 1%,

**எழுத்தறிவு வீதம்:** 99.4%

**கலாசாரம்:** மேற்கத்தேய நவநாகரிகத்துக்குட்பட்ட சிறப்பான கலாசாரம் நிலவுகிறது. புவியியல், இலக்கியம், கட்டடக் கலை, நடனம், இசை போன்ற துறைகளில் கலாசாரப் பண்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ரஷ்யா, ஜோர்ஜியா, ஈரான் மற்றும் மத்தியகிழக்கு நாட்டு கலாசாரங்களை இங்கு காணலாம்.

**நாணயம்:** டிராம் - Dram (AMD)

**நேரம்:** UTC (UTC+4),

**இணையத்தளக் குறியீடு:** .am,

**சர்வதேச தொலைபேசி இலக்கம்:** 374

**பிரசித்தி பெற்ற விளையாட்டுக்கள்:** மல்யுத்தம், பளு தூக்கல், ஜூடோ, கால்பந்து, செஸ், பொக்ஸின்

**தேசிய சின்னங்கள்:** மலர்,மரம், விளையாட்டு (தெரிவு செய்யப்படவில்லை), மிருகம் - சிங்கம், பறவை - பருந்து

## தேசிய கீதம்

Sovetakan azad ashkharh Hayastan,
Bazum darer dazhan champ'a du ants'ar,




K'aj vordik' k'o mak'ar'ets'in k'ez hamar,
Vor dar'nas du mayr Hayrenik' hayut'yan...... என்று ஆரம்பமாகும்.

**பிரசித்தி பெற்ற இடங்கள்:** 'Matenadaran' கட்டடம்- உலகில் இடைக்காலத்திற்குரிய புத்தகங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை அதிகளவு களஞ்சியப்படுத்தியிருக்கும் நிலையம், Etchmiadzin cathedral- நூதனசாலை, Sardarabad- பிரசித்தி பெற்ற யுத்த நினைவுத்தூபி.

## பொருளாதாரம்

இந்நாட்டின் சுதந்திரத்திற்குப் பின் தொழில்துறையில் நவீன மயமான முறையில் வளர்ச்சி கண்டது. சோவியத் குடியரசுகளில் இருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்து,அவற்றைத் தரமான பொருட்களாக மாற்றி, ஏற்றுமதி செய்வதில் நிபுணத் துவம் பெற்ற நாடாகும்.

**பொருளாதார வளர்ச்சி வீதம்:** 13.7%,

**வேலையற்றோர்:** 7.1% (2007),

**விவசாயம்:** 46.2%,

**பயிரிடக்கூடிய நிலங்கள்:** 16.78%

**விவசாயப் பயிர்கள்:** பழங்கள் (குறிப்பாக திராட்சை), மரக்கறி வகைகள்.

**கைத்தொழில் துறை:** வைரம் மற்றும் உலோகச் செதுக்கல் இயந்திர உபகரணம், அச்சு இயந்திரம், மின்சார மோட்டார்கள், டயர், தைத்த ஆடைகள், கழுத்துப்பட்டி, பாதணிகள், பட்டுத்துணி, ரசாயனப் பொருட்கள், உபகரணங்கள், மைக்ரோ இலத்திரனியல், ஆபரணங்கள், மென் பொருட்கள், உணவுப் பொருட்கள், பிரண்டி என்பனவாகும்.

**கனிப்பொருள் வளம்:** தங்கம், செம்பு, துத்தநாகம், அலுமினியம்

**ஏற்றுமதி:** வைரம், கனிப்பொருட்கள், உணவு வகைகள், சக்தி வளம் என்பன இவற்றில் முக்கியமானவை.

**இறக்குமதிப் பொருட்கள்:** இயற்கை வாயு, பெற்றோலியம், புகையிலை உற்பத்திகள், உணவுப் பொருட்கள், வைரங்கள்.

**முக்கிய வர்த்தகத் தொடர்பு நாடுகள்:** ரஷ்யா, உக்ரைன், பெல்ஜியம், துர்க்மெனிஸ்தான், இத்தாலி, ஜேர்மனி, ஈரான், இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா,ஜோர்ஜியா.

**தகவல் தொடர்பாடல்:** பிரதான தொலைபேசி பாவனையாளர்கள்-சுமார் 594,400, கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்-318,000, வானொலி நிலையங்கள் -AM9 FM 16 சிற்றலை-1 (2006) தொலைக்காட்சி நிலையங்கள்-48, இணையத்தளப் பாவனையாளர்கள்-172,800.

**போக்குவரத்துத் துறை:** புகையிரதப் பாதை -839 கி.மீற்றர், பெருந்தெருக்களின் மொத்த நீளம் - 7700 கி.மீற்றர், நீர்ப் போக்குவரத்து - இல்லை,துறைமுகங்கள் - இல்லை, விமான நிலையங்கள் -12 (2007)

## யேரெவன் வீரர்களின் நாடு

உலகின் மிகப் பழைமையான நகரங்களுள் ஒன்றுதான் ஆர்மீனியாவின் தலைநகர் யேரெவன்.1968இல்யேரெவன் நகரவாசிகள் இந்நகரத்தின் 2750 ஆவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார்கள்.கி.மு 782 இல் யுரார்டு பகுதியின் ஆர்கிஷ்தி மன்னரே இந்நகரை உருவாக்கியதாகக் கூறப்படுகின்றது. 'யேரெபுனி' எனும் புராதன ஆர்மேனியச் சொல்லில் இருந்துதான் 'யேரெவன்' உரு வானது என்பது வரலாறு. 'யேரெவன்'என்றால்'வீரர்களின் நாடு' என்று பொருள்படும்.


உயரமான மலை-அரகாட்ஸ் மலை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






**(வினாத்தாள் I)**

பெயர்: ........................................................ நேரம்: 45 நிமிடங்கள்

✱ 1 தொடக்கம் 32 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

✱ **1 ஆம் 2 ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்க.**

01.


02.


✱ **கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையைக் கொண்டு, 3 ஆம் 4 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

**8, 6, N, S, K, 6, K, 7, N, S, 7, B, S, 4, L, S, L, L, 2, 7, N, L, S, S, 2, N, N, 2, S, R**


03. இலக்கங்களும் எழுத்துக்களும் உள்ள இந்நிரையில் எத்தனை S எழுத்துக்கள் உள்ளன?

(1) 8 (2) 9 (3) 6 (4) 7

04. இங்கு ஓர் இலக்கத்திற்கு முன்னும் பின்னும் ஒரே வகையான எழுத்து காணப்படுகிறது. அவ்வெழுத்து எது?

(1) எழுத்து S (2) எழுத்து L (3) எழுத்து K (4) எழுத்து R

✱ **கீழே தரப்பட்டுள்ள உருக்கள் ஒவ்வொன்றுக்கும் எண் பெறுமானம் உண்டு. (ஒரே வடிவமுடைய உருக்களுக்கு ஒரே எண் பெறுமானம்). இத்தொடர்பை அவதானித்து, 5 ஆம் 6 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**




05.  உருவின் பெறுமானம் யாது?

(1) 5 (2) 6 (3) 8 (4) 3

06. △ x ✡ = ? என்பதன் பெறுமானம் யாது?

(1) 6 (2) 18 (3) 14 (4) 9

✱ **பின்வரும் குறியீட்டுக்கோவையை அவதானித்து, 7 ஆம் 8 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**

6 △ 2 = 4 ✡ 2 — இதில் = என்ற குறியீடு சமன் என்பதைக் குறிக்கின்றது. கணித விதிகளுக்கு ஏற்ப △ உம் ✡ உம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.


07. குறியீடு △ எதனைக் குறிக்கின்றது?

(1) கூட்டல் (2) பெருக்கல் (3) கழித்தல் (4) வகுத்தல்

08. குறியீடு ✡ எதனைக் குறிக்கின்றது?

(1) கழித்தல் (2) வகுத்தல் (3) பெருக்கல் (4) கூட்டல்

✱ **9 ஆம் 10 ஆம் வினாக்களுக்குரிய விடையை, பின்வரும் கூட்டில் தரப்பட்டுள்ள எண்கள், எழுத்துக்கள், குறியீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தெரிவு செய்க.**




09. இக்கூட்டில் அதிக எண்ணிக்கையில் காணப்படுவன;

(1) எண்கள் (2) எழுத்துக்கள்
(3) குறியீடுகள் (4) மூன்றும் சமன்

10. இக்கூட்டில் அதிக எண்ணிக்கையில் காணப்படுவது யாது?

(1) △ (2) 3
(3) இ (4) வ

11. அந்த மனிதரிடம் அவரது வயதைக் கேட்டால் நேரடியாகச் சொல்லமாட்டார். ''என் வயதிலுள்ள இரு எண்களையும் கூட்டினால் 9 வரும். அந்த இரு எண்களையும் இடம் மாற்றிப் போட்டால், என் வயதிலும் 9 கூடி விடும்'' என்பார். அப்படியானால் அவரின் வயது என்ன?

(1) 72 (2) 27 (3) 63 (4) 45

12. விளையாட்டுப் போட்டி ஒன்றில் சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள் ஆகிய நிறக் கொடிகள் மைதானத்தில் இதே ஒழுங்கில் நடப்பட்டுள்ளன. 38 ஆவதாக நடப்பட்ட கொடியைத் தெரிவு செய்க.

(1) சிவப்பு (2) நீலம் (3) பச்சை (4) மஞ்சள்

13. படத்தில் இருக்கும் போத்தலை சிறிது சரித்தால் அதன் நீர்மட்டம் இருப்பதைக் காட்டும் சரியான படம் 



✱ **பின்வரும் விபரம் ஒரு தோட்டத்தில் உள்ள மரங்களைப் பற்றியது. இதனைப் பயன்படுத்தி, 14 ஆம் 15 ஆம் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

✱ பழம் தரும் மரங்கள் - 15 ✱ பழம் தரும் மரங்கள் அல்லாதன - 10
✱ பலா மரங்கள் - 5 ✱ மா மரங்கள் - 3 ✱ தென்னைகள் - 6

14. இவ்விபரங்களுக்கு ஏற்ப, தோட்டத்தில் உள்ள மரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 36 (2) 30 (3) 39 (4) 25

15. இவ்விபரங்களுக்கு ஏற்ப, தோட்டத்தில் உள்ள பழங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மரங்களின் எண்ணிக்கை யாது?

(1) 20 (2) 28 (3) 15 (4) 18

✱ **பின்வரும் சொற்களை வாசிக்க. இதற்கேற்ப 16 ஆம் 17 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

என்னைப் பார்த்துக் △ .........
ஏதோ கேள்வி கேட்கிறதே
இன்னும் ✡ ......... பழகாத
இனிய சொற்கள் சொல்கிறதே

16. △ என்ற குறியீடு இருக்கும் இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

(1) பறக்கிறது (2) சிரிக்கிறது (3) கதைக்கிறதே (4) உதைக்கிறது


17. ✡ என்ற குறியீடு இருக்கும் இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

(1) நீங்கள் (2) நாங்கள் (3) நீ (4) அவர்கள்


✱ **18 ஆம் 19 ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண்கோலத்தை அவதானித்து, (?) வெற்றிடத்துக்குப் பொருத்தமான பெறுமானத்தைத் தெரிவு செய்க.**

18. 


(1) 10 (2) 24
(3) 12 (4) 6

19. 


(1) 76 (2) 30
(3) 44 (4) 38

20. 


வரிப்படத்தில் தரப்பட்டுள்ள பென்சிலின் நீளம் எத்தனை சென்ரிமீற்றர்?

(1) 11cm (2) 6cm (3) 5cm (4) 10cm

21. வீதியொன்றில் இரு கம்பங்களுக்கிடையே 4 நிற மின்குமிழ்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவ்வீதியில் 9 கம்பங்கள் இருப்பின் எத்தனை நிற மின்குமிழ்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன?

(1) 36 (2) 32 (3) 13 (4) 40

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் என்பது உலகில் புதிய விடயமன்று; அத்துடன், யுத்தம் நன்மை தரக்கூடியதும் அன்று. அது மானிட வர்க்கத்தை சகல விதமான அழிவுகளுக்கும் ஆளாக்கக் கூடியளவுக்கு மிகக் குரூரமானதாகும். ஒரு யுத்தத்தில் பெரிய படை பலம், ஆயுத பலம் இருந்தால் மட்டும் எதிரியை வெற்றி கொள்ள முடியாது. மாறாக, தந்திரோபாயமானதும் மதிநுட்பம் நிறைந்ததுமான முறையில் திட்டங்களை வகுத்து, யுத்தம் செய்யும் போதுதான் வெற்றியை அடையலாம். இதனை நோக்காகக் கொண்டுதான் இலத்திரனியல் குண்டு தயாரிப்பது குறித்து அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளும் முயன்று வருகின்றன.



# இலத்திரனியலை செயலிழக்கச் 'E-bomb'

## இலத்திரனியல் குண்டு என்றால் என்ன?

யுத்த களத்தில் பல்வேறு ரகங்களில் குண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. குண்டுகளில் அணுகுண்டு அல்லது ஐதரசன் குண்டுகளால் குறித்த பிரதேசத்திலுள்ள கட்டடங்கள், மனிதர்கள் உட்பட அனைத்தையும் முழுமையாக அழித்தொழிக்க முடியும். இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானின் ஹிரோஷிமா-நாகசாகி நகரங்களில் அமெரிக்கா வீசிய அணுகுண்டு ஏற்படுத்திய அழிவை உலகம் இன்னும் மறக்கவில்லை. அதன் பாதிப்புகளை அம்மக்கள் இன்றும் அனுபவிகின்றவர்களாகவே இருக்கின்றனர்.

அதேபோல் 'மெகடன்' எனப்படும் குண்டு, அதன் எடையினைப் பொறுத்து, மனிதர்களையும் கட்டடங்களையும் அழிக்கும் ஆற்றல் மிக்கது.

அவ்வாறே, 'நேபாம்' ரகக் குண்டானது, தாக்கப்படும் பிரதேசத்தை முழுமையாக தீக்கிரையாக்கக்கூடியது. மேலும் 'நியுட்ரோன்' குண்டுகளால் காகித கோவைகள், கடிதங்கள் மற்றும் கட்டடங்களை மீதப்படுத்தி, மனிதர்களை மட்டும் அழிக்க முடியும்.

இவ்வாறு, வகைப்படுத்தப்படும் குண்டுகளின் தொழில்நுட்பத்தில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பம்தான் இலத்திரனியல் காந்தக்குண்டு (Electro magnatic bomb) தொழில்நுட்பமாகும். இந்தக் குண்டு வீசப்பட்ட இடத்தில் உள்ள மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் இது எவ்வித ஆபத்தையும் ஏற்படுத்தாது. மாறாக, இலத்திரனியல் உபகரணங்களை மட்டும் செயலிழக்கச் செய்யக்கூடியதாகும்.

## விளைவுகள்


நடைமுறையில் யுத்த தந்திரோபாயங்களிலும் கருவிகளிலும் இலத்திரனியல்

தொ
கை
அதி
கி
இத
தொ
கட்
இல
உ












இலத்திரனியல் குண்டு விண்ணில் வெடித்துச் சிதறுவதும் வெளியாகும் இலத்திரனியல் காந்தக்கதிர்களின் வீச்சம்



அணுகுண்டு மற்றும் ஐதரசன் குண்டுகளினால் ஏற்படும் அழிவு







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பத்தைக் கையாளும் நாடுகளுக்கே அதிக நன்மைகள் கிடைக்கின்றன. இதற்கமைய இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் உச்சக் கட்டம்தான் இந்த இலத்திரனியல் குண்டின் உருவாக்கமாகும். இந்தக் குண்டு வீசப்பட்ட பகுதிகளில் இலத்திரனியல் காந்தக் கதிர்கள் (Electro magnatic pulse) பரவி, அங்குள்ள இலத்திரனியல் உபகரணங்களை முற்றாக செயலிழக்கச் செய்துவிடுகின்றன.

இந்தக் குண்டு ஒரு நகரில் வீசப்பட்டால், இந்தக் குண்டில் இருந்து வெளிப்படுத்தப்படும் கதிர் மற்றும் இலத்திரனியல் செறிவினால் அந்நகரின் இலத்திரனியல் தொழில்நுட்பத்தை முற்றாக, செயலிழக்கச் செய்து விடலாம். அதாவது கணினி செயற்பாடுகள், ரேடார் செயற்பாடுகள், செய்மதித் தொழில்நுட்பங்கள், இலத்திரனியல் தகவல் பரிவர்த்தனைகள், டிரான்சிஸ்டர்கள், சிப்ஸ், சேர்கிட்கள் உள்ளடங்களாக அனைத்து இலத்திரனியல் உபகரணங்களின் தொழிற்பாடுகளையும் செயல் இழக்கச் செய்துவிடலாம்.



எனினும், இந்தக் குண்டில் இருந்து வெளியாகும் இலத்திரனியல் காந்தக் கதிர்வீச்சுத் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெற வேண்டின் 'ஃபரடே' பாதுகாப்புக் கூடொன்றை இலத்திரனியல் உபகரணங்களைச் சுற்றி அமைத்திருக்க வேண்டும். இந்தப் பாதுகாப்புக் கூடானது அலுமினிய உலோகத் தகடுகளால் ஆனதாகும். இந்த அலுமினியத் தகடுகள் இலத்திரனியல் குண்டின் கதிர்த் தாக்கங்களை முறியடிக்கக்கூடியது. எனினும், இதனால், கணினிகளின் செயற்பாட்டினை முழுதாகப் பாதுகாத்துக் கொள்ளலாம் எனக் கருதமுடியாது. ஏனெனில், கணினிகளுக்கு இயக்க சக்தியை வழங்கும் என்டெனாக்கள் இந்தக் குண்டு வெடிப்பினால் பிறப்பிக்கப்படும் காந்தக் கதிர்வீச்சுகளின் தாக்கத்துக்கு உட்படக்கூடும் என்பதினாலாகும்.

அதன்படி, எதிர்காலக் குண்டு தொழில்நுட்பத்தில் இத்தகைய இலத்திரனியல் குண்டுகளுக்கு அதிமுக்கியத்துவம் கிடைக்கப் போவது திண்ணம்.

## ரகசிய சக்தி

இந்தக் குண்டு வெடிப்பின் போது வெளிப்படுத்தப்படும் இலத்திரனியல் கதிர்வீச்சுத் தாக்கமானது முதன்முதலில் விண்ணில் ஏவப்படும் அணு ஆயுத ஏவுகணையின்போது பரீட்சிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த இலத்திரனியல் குண்டின் உண்மையான தோற்றம் மற்றும் சக்தி பற்றி இன்னும் உறுதியான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. இது தொடர்பான ஆய்வுகளையும் பரீட்சார்த்த நடவடிக்கைகளையும் ரகசியமாக வைத்திருக்கவே அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

ராணுவ நிபுணர்களின் கருத்தின்படி, அதிசக்தி வாய்ந்த அமுக்க தொழில்நுட்பம் இந்தக் குண்டு தயாரிப்பில் கையாளப்பட்டுள்ளதாகவும் அதிக தாக்கத்தினை உணரக்கூடிய வகையில் இது வெடிக்க வைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.


## பாவனை

இதுவரையில் கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின்படி 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற வளைகுடா யுத்தத்தின்போது அமெரிக்க கடற்படை இந்த இலத்திர னியல் குண்டைப் பயன்படுத்தியுள்ளது. அதேபோல் 2003 ஆம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா தாக்குதலைத் தொடுத்த போது, அந்நாட்டின் தொலைக்காட்சி அலைவரிசை செயற்பாடுகளை செயலிழக்கச் செய்யும் நோக்கில் இக்குண்டு பயன்படுத்தப்பட்டதாக மேற்கத்தேய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

குறிப்பாக, சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்கு முன்னர் வளிமண்டலத்தில் வெடிக்க வைக்கக்கூடிய, இலத்திரனியல் காந்தக் கதிர்வீச்சுடைய அணு ஆயுதங்கள் உற்பத்தி தொடர்பிலான பல்வேறு ஆராய்ச்சிகள் ரஷ்யாவால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதன் பின்னர்தான் அமெரிக்காவும் ஐக்கிய ராச்சியமும் இந்த முயற்சியில் களமிறங்கியுள்ளன.

எனினும், அண்மையில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள ஆயுத உற்பத்தி, பரிமாற்றத் தடை ஒப்பந்தம் காரணமாக இவ்வாறான ஆயுதத் தயாரிப்புகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டபோதும் பல வல்லரசு நாடுகளின் பரீட்சார்த்த முயற்சிகள் வெற்றியளித்துள்ளன. குறிப்பாக, அமெரிக்கா இந்த முயற்சியில் வெற்றி கண்டிருக்கின்றது.

-அ



குண்டு வெடிக்கும்போது உள்ளே நிகழும் கதிர் மாற்றமும் வெளியேறலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணனின் அபார மூளை

ஓர் ஊரில் அருணன் என்ற பணக்கார இளைஞன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவ்வூரில் உள்ள இளைஞர்களுக்குள் தானே அபார மூளையுடையவன் என்று அவன் பெருமைப்பட்டுக் கூறிக் கொள்வான். மற்றவர்கள் அவனைக் குறைத்து மதிப்பிட்டால் அவனுக்குக் கோபம் வந்துவிடும். உண்மையில் அருணன் அப்படியொன்றும் அதிபுத்திசாலி அல்ல.

ஒருநாள் அயலூரில் நடக்கும் திருவிழாவிற்கு அருணன் புறப்பட்டுச் சென்றான். நடுவழியில் ஓர் அடர்ந்த காடு. முன் எச்சரிக்கைக்காக அருணன் பெரிய தடியொன்றை எடுத்துச் சென்றான். அவன் நடுக்காட்டை அடைந்ததும் சில திருடர்கள் அவனை வழி மறித்தார்கள். அவனிடம் இருப்பதைத் தரும்படி மிரட்டினர். ஆனால், அருணனோ திருடர்களுக்குப் பயப்படாமல் பேசாமல் நின்றான்.

இதைக் கண்ட திருடர்கள் கோபம் கொண்டு அருணனை தாக்க முற்பட்டனர்.



அந்நேரம் அருணன்தன் பாதுகாப்புக் கருதி கொண்டு வந்த தடியால் அவர்களை எதிர்த்துச் சண்டையிட்டான். திருடர்களின் உடலில் காயம் ஏற்பட்டது. திருடர்கள் ஐந்து ஆறு பேர் நின்றதால் அவனால் அதிக நேரம் எதிர்த்து சண்டையிட முடியவில்லை.

இறுதியில் திருடர்கள் அனைவரும் சேர்ந்து அவனைப் பிடித்து மரத்தில் கட்டிப் போட்டனர். திருடர்களில் ஒருவன் அருணனை சோதனையிட்டு அவன் இடுப்பில் இருந்த பணப்பையை எடுத்துப் பார்த்தான். அப்பைக்குள் சில சில்லறை நாணயங்கள் மட்டுமே இருந்தன.

இதைக் கண்ட திருடன், "இதற்காகவா எங்களுடன் இவ்வளவு நேரம் சண்டையிட்டாய்? முட்டாள் உனக்குக் கொஞ்சமாவது மூளை இருக்கிறதா?" என்று ஏளனமாகக் கேட்டான்.

இவ்வாறு, திருடன் கேட்டதுதான் தாமதம், அருணனுக்கு கடுங் கோபம் ஏற்பட்டுவிட்டது. "யாரைப் பார்த்து முட்டாள் என்று கேட்டாய்? எனக்கு அபார மூளை உள்ளது. நான் ஒன்றும் இந்த சில்லறைக் காசுக்காக சண்டை போடவில்லை. எனது தலைப்பாகையில் மறைத்து வைத்திருக்கும் ஆயிரம் பொற்காசுகளைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் சண்டை போட்டேன்" என்று கூறினான்.

உடனே திருடர்கள் அவனின் தலைப்பாகையைக் கழற்றி மறைத்து வைத்திருந்த பொற்காசுகளை எடுத்துச் சென்றார்கள்.

எம்.எல்.எஃப்.ஹஸ்னா,
இ/பாலர் இயேசு கன்னியர் மடம்,
தேசிய பாடசாலை, இரத்தினபுரி.



## விடிவை நோக்கி....

நெஞ்சிலே உறுதியுண்டு - என்னும்
எண்ணத்தைத் துணையாய் கொண்டு
நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு
நாம் செல்வோம் நலன் தேடி.

சாதி சாதி என்று நம் வாழ்வில்
சாதித்தது எதுவும் இல்லை.
ஒற்றுமையாய் வாழ்வோமென்று
உறுதி கொள்வோம் நெஞ்சினிலே.

ஒற்றுமையைக் குவித்திடுவோம்.
சமாதானத்தை வளர்த்திடுவோம்.
இறைவன் அருளுடனே
இனிதாக வாழ்ந்திடுவோம்.

இனமத பேதம் மறந்து
இனிய நம் வாழ்வை நினைத்து
ஒற்றுமையாகக் கூடி வந்து
புறப்படுவோம் விடிவை நோக்கி.

எச்.எச்.சாஜிதா பர்வீன்,
பள்ளிவாசல் துறை மு.ம.வித்.,
கற்பிட்டி.

## புகைப் பழக்கம்



புகை பிடிக்கும் பழக்கம் மனித வாழ்வைச் சீரழிக்கும் ஒன்றாகும். புகையிலையில் அடங்கியுள்ள சேர்வைகளுள் பெரும்பாலானவை நச்சுத் தன்மை வாய்ந்தவை. அவற்றுள் ஒன்று 'நிக்கோட்டீன்' ஆகும். இது 'அதிரினலின்' எனும் சுரப்பினைத் தூண்டக் கூடியது.அதனால், இருதயத் துடிப்பும் நாடித் துடிப்பும் அதிகரிக்க வாய்ப்புண்டு. இரத்த அமுக்கமும் உயரலாம். இந்த நிலைமை முதலில் புத்து ணர்வை அளிப்பதைப் போன்று உணரப்பட்டாலும் இருதயக் கோளாறுகளுக்குக் காரணமாக அமைகிறது.

புகை பிடிப்பதால் நுரையீரல்களில் புகை நிரம்பி விடுகின்றது. குருதிக்குப் போதியளவு ஒட்சிசன் வாயு கிடைப்பது தடைப் படுகின்றது. இதனால், மூளையின் செயற்பாடுகள் சீராக நடைபெறாது தடைப்படுகின்றன. 'காபன் மொனாக்சைட்டு' என்பது புகையில் அடங்கியுள்ள மற்றுமோர் ரசாயனச் சேர்வையாகும். இதனால், இருதயக் கோளாறு மற்றும் பாரிசவாதம் போன்ற அபாயகரமான நோய்கள் ஏற்படலாம்.



இவ்வாறு நோய்களைத் தரும் புகைத்தலை அழித்தொழித்து சமுதாயத்தைச் சீர்செய்வோமாக!

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,மருதமுனை.



# உலகிலேயே உயர்ந்த அருவி

உலகிலேயே உயரமான அருவி வெனிசுவெலா நாட்டில் உள்ள 'ஏஞ்சல்' அருவியாகும். வெனிசுவெலா நாட்டின் பொலிவார் ஸ்டேட்டில் உள்ள கிரான் சபானா என்ற பகுதியில் இந்த 'ஏஞ்சல்' அருவி வியக்கவைக்கும் உயரத்திலிருந்து விழுகிறது.

இந்த அருவியை வெனிசுவெலாவைச் சேர்ந்த ஆய்வாளர் எர்னெஸ்டோ சான்சஸ்லா குருஸ் என்பவர் 1912 ஆம் ஆண்டு கண்டுபிடித்தபோது அதனை அவர் வெளிப்படுத்தவில்லை. இந்நிலையில் 1933 ஆம் ஆண்டளவில் இப்பகுதியில் தங்கத் தாதுப்பொருட்களைத் தேடும் பணியில் ஈடுபட்ட அமெரிக்கரான ஜேம்ஸ் கிராபோர்டு ஏஞ்சல் ஒரு சிறிய விமானத்தில் பயணிக்கும் பொழுது வானிலிருந்து விழுவதைப் போன்று அமைந்துள்ள 'ஏஞ்சல்' அருவியைப் பார்த்து திகைத்துப் போனார்.

உடனே விமானத்தை அவசரமாகத் தரையிறக்க முயல அது சிறு விபத்துக்குள்ளானதில் கிராபோர்டு ஏஞ்சல் அவருடைய மனைவி மேரி உட்பட 3 பேரும் காயமின்றித் தப்பினர். இந்த விபத்து நடந்த பின்னர், இவ்விடத்தில் இருந்து 11 நாட்கள் தொடர்ந்து நடந்த பின்னரே மக்கள் வசிக்கும் பிரதேசத்தை இவர்களால் அடைய முடிந்தது. காடுகள் அடர்ந்த இப்பிரதேசத்தில் இருந்து இப்புதிய அருவியைக் கண்டுபிடித்த கிராபோர்டு ஏஞ்சலின் நினைவாக அதற்கு 'ஏஞ்சல் அருவி' என்று பெயரிடப்பட்டது. கிராபோர்டு மட்டுமல்ல அவர் பயணம் செய்த குட்டி விமானமும் இன்றுவரை நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. உலகிலேயே உயர்ந்த இந்த 'ஏஞ்சல்' அருவி வெனிசுவெலாவின் முக்கிய சுற்றுலாத் தலங்களுள் ஒன்றாகும். ஆனால், இன்றும் இந்த அருவியை அடைவது அவ்வளவு எளிதான விடயமல்ல. அடர்ந்த காட்டுப் பள்ளத்தாக்குப் பகுதியில் இந்த அருவி அமைந்துள்ளதே இதற்குரிய முக்கிய காரணமாகும்.



எம்.எஸ்.எம்.ஸப்னாஸ்,
க/தெழம்புகஹாவத்தை
மு.வித்.,
அக்குறனை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்காலம் உங்கள் கையில்





**எம் ஒவ்வொருவரினதும் சிறப்பான எதிர்காலத்திற்கான அத்திவாரமாக அமைவது பாடசாலைக் கல்வியாகும். பாடசாலையில் முதலாம் தரத்தில் அனுமதிக்கப்பட்டதிலிருந்து அறிவுத் தேடலுடன் ஆரம்பமாகும் கல்விப் பயணம், குறித்த கட்டத்தில் இலட்சியப் பயணமாகத் திசை மாறுகிறது. அதுவரை எல்லா விதமான அறிவினையும் கற்று வந்த நாம், அந்த எல்லையைக் கடந்த பின்னர் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்காக வேண்டி, குறித்த ஒரு துறை சார்ந்த கல்வியில் தேர்ச்சி பெறுவது அவசியமாகும்**

பொதுவாக இலங்கையில் க.பொ.த (சா/தர) பரீட்சைக்குத் தோற்றி-சித்திபெற்று-க.பொ.த (உ/தரம்) கற்க வேண்டிய நிலை உள்ளபோதே இத் தீர்மானம் எடுக்க வேண்டிய நிலைக்கு நாம் ஆளாகின்றோம். எனவே, தற்போது அத்த கையதொரு மனநிலையில் இருக்கும் மாணவர்களுக்கான ஒரு வழிகாட்டலாகவும் ஆலோசனையாகவுமே இந்தக் கட்டுரை அமைகின்றது.

## க.பொ.த (உ/தர) பாடத் தெரிவு

இலங்கைப் பாடத்திட்டத்தின் படி, க.பொ.த (உ/தர) பாட நெறியிலேயே தமது துறையை தெரிவு செய்வதற்கான முதல் வாய்ப்புக் கிடைக்கின்றது. எனவே, பரீட்சார்த்த முயற்சிகள் எதுவுமின்றி, நேரடியாகவும் உறுதியா கவும் தமது துறையைத் தெரிவு செய்வது அவசி யமாகின்றது. அத்துடன், பிழையான தெரிவுகள் பாரதூர மான பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

## பாடத்தெரிவு முறை

ஆகவே, உயர்தர பாடத் தெரிவு முறையானது பெருமள வில் சா/தர பரீட்சையின் மொத்தப் பெறுபேற்றிலேயே தங்கியுள்ளது. இங்கு பாடரீதியான பகுப்பாய்வுகள் நடைபெறுவதில்லை. மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் விஞ்ஞான, கணிதத் துறைகளையும் குறைந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் கலைத்துறையையும் சராசரிப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் வர்த்தகத் துறையையும் தெரிவு செய்யும் வழமை காணப்படுகிறது. (இதில் சிறந்த, குறைந்த, சராசரிப் பெறுபேறுகள் என்பன பாடசாலைக்குப் பாடசாலை பிராந்தியத்துக்குப் பிராந்தியம் வேறுபடும்) இத்தெரிவு முறை சரியானதல்ல. அத்துடன், குடும்பத்த வரின் விருப்பு-வெறுப்புகள், அழுத்தங்கள் போன்ற காரணிகளும் பாடத் தெரிவில் செல்வாக்கு செலுத்துவதை நாம் காணலாம். எனினும், இங்கு குடும்பத்தவர் களின் விருப்பு-வெறுப்புகளுக்கு மாறாக, குறித்த மாணவனின் விருப்பு-வெறுப்புகள் ஆராயப்படுவது சிறந்த முறையாகும்.



## நான்கு இயல்புகள்

ஒவ்வொரு மனிதனிலும் மூளையின் உயர் செயற்பாடுகளுக்குரிய நான்கு இயல்புகள் காணப்படுகின்றன. அவையாவன;

**1. கிரகித்தல் திறன்** - குறித்த தொரு சிக்கலான விடயத்தை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் 'கிரகித்தல் திறன்' எனப்படுகிறது.

**2. நினைவாற்றல்** - இறந்தகால நிகழ்வொன்றினை/அதன் விளைவு களை தற்போதைய பிரச்சினையொன்றில் பிரயோகிக்கும் ஆற்றல் நினைவாற்ற லாகும். நினைவாற்றலைப் பொறுத்த வரை மூன்று பிரதான வழிமுறைகளி னூடாக நிகழலாம். அவையாவன;

*** செவி வழி நினைவாற்றல்**- செவி வழி நினைவாற்றல் அதிகம் உள்ளவர்கள் தமது செவிப்புலனி னூடாக உள்வாங்கிக் கொண்ட வற்றை, மிக இலகுவாக நினைவில் இருத்திக் கொள்வர். செவி வழி நினைவாற்றலை அதிகமாகக் கொண்ட வர்கள் பரீட்சையில் விடை யெழுது வற்கு சிந்திக்கும் போது, ஆசிரியர் கூறிய விடயங்கள் அல்லது சக மாணவர்களுடன் கலந் துரையாடிய விடயங்கள் காதில் கேட்பது போன்று நினை வுக்கு வரும்.

*** விழி வழி நினைவாற்றல்** - விழி வழி நினைவாற்றல் உள்ளோருக்கு தமது விழிப்புலனூடாக உள்வாங்கும் தகவல்களை நினைவில் பதிந்து கொள் வது இலகுவாக இருக்கும். விழி வழி நினைவாற்றல் அதிகமாக உள்ளவர்கள் பரீட்சைக்கான விடையை சிந்திக்கும் போது தான் கண்ட படங்கள், வரைபுகள், அட்டவணைகள் போன்றவை நினைவுக்கு வரும்.

*** உடலசைவு வழி நினைவாற்றல் -** உடலசைவு வழி நினைவாற்றல் அதிகமாக உள்ளோர் தாம் செய்த செயற்பாடுகளை நினைவில் வைத்திருப்பர்.அதேபோன்று, உடலசைவு வழி நினைவாற் றல் அதிகம் உள்ளவர் களுக்கு தான் செய்த பரிசோதனைகள், தான் வரைந்த படங்கள், வரைபுகள், தன் கைப்பட எழுதிய அட்ட வணைகள், பந்திகள் என்பன நினைவுக்கு வரும்.



**க.பொ.த (உ/தர) பாடத்தெரிவிற்கான வழிகாட்டல்**



**3. தர்க்கரீதியாக சிந்திக்கும் திறன் -** குறித்த விடயமொன்றின் காரண-காரிய ரீதியான தொடர்புகளை புரிந்துகொள்ளும் மற்றும் எதிர்வு கூறும் ஆற்றல் 'தர்க்கரீதியாக சிந்திக்கும் திறன்' எனப்படுகிறது.

**4. புத்தாக்க சிந்தனை -** முற்றிலும் புதிய, வேறுபட்ட, அழகான, பிரயோசனமுள்ள விடயங்களை சிந்திக்கின்ற, நிர்மாணிக்கின்ற ஆற்றல் 'புத்தாக்க சிந்தனை' எனலாம்.

## ஆற்றல்களை இனங்காணல்

மேற்குறித்த உளவியல் ஆற்றல்கள் எல்லா மாணவர்களிலும் காணப்பட்ட போதிலும் அவை சம அளவுகளிலும் சம விகிதங்களிலும் அவர்களிடத்தில் காணப்படுவதில்லை. அவற்றுள் சில ஆற்றல்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகமாகக் காணப்படும். அவ்வாற்றல்களை இனங்காணுவதற்கு சில குறிகாட்டி களைப் பயன்படுத்த முடியும்.

✸ மொழி, கணிதம், விஞ்ஞானப் பாடங்களில் அதிக திறமையுள்ள-அதிக விருப்பமுள்ள மாணவர்கள் அதிக கிரகித்தல் திறன் உடையவர் களாக இருப்பார்கள்.

✸ வரலாறு, சமூகக்கல்வி, விஞ்ஞானப் பாடத்தின் உயிரியல் பிரிவு போன்ற பாடங்களில் அதிக திறமையை வெளிப்படுத்தி-அதிக விருப்பத்தை கொண்டுள்ள மாணவர்கள் அதிக நினைவாற்றல் உள்ளவர்களாக இருப்பார்கள்.

✸ விஞ்ஞானப் பாடத்தில் பௌதீ கவியல் பிரிவு, கணித பாடம் போன்றவற்றில் அதிக திறமையுள்ள மற்றும் அப்பாடங்களில் அதிக விருப்பமுடையமாணவர்கள் தர்க்கரீதியாக சிந்திக்கும் திறன் மிக அதிகம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

(தொடர்ச்சி 21ஆம் பக்கத்தில்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்



189

## ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்திலும் ஆனந்தவுக்கும் மாமிக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

නැන්දා: පුතා ටිකක් ඉන්න. කෑම කාලා යන්න.
புதா டிகக் இன்ன. கேம காலா யன்ன.
மாமி: மகன் கொஞ்சம் நில்லுங்கள். சாப்பிட்டுவிட்டுப் போங்கள்.

ආප්ප තියෙනවා පුතා.
ஆப்ப தியெனவா புதா.
அப்பம் இருக்கு மகன்.

මස් කරි ගන්න පුතා.
மஸ் கறி கன்ன புதா.
இறைச்சிக் கறி எடுங்க மகன்.



ආනන්ද: මස් කරි එපා නැන්දේ.
மஸ் கறி எபா நெந்தே.
ஆனந்த: இறைச்சிக்கறி வேண்டாம் மாமி.

මම මස් කන්නේ නැහැ.
மம மஸ் கண்ணே நெஹெ.
நான் இறைச்சி சாப்பிடுவதில்லை.

නැන්දා: උම්බලකඩ සම්බෝල තියෙනවා පුතා ගන්න.
உம்பளகட சம்போல தியெனவா புதா கன்ன.
மாமி: மாசிச் சம்பல் இருக்கு மகன் எடுங்க.

ආනන්ද: සම්බෝල හරි රසයි.
சம்போல ஹரி ரசய்.
ஆனந்த: சம்பல் நல்ல ருசி.

නැන්දා: තව ආප්ප කන්න පුතා.
தவ ஆப்ப கன்ன புதா.
மாமி: இன்னும் அப்பம் சாப்பிடுங்க மகன்.

ආනන්ද: එපා නැන්දේ ඇති.
எபா நெந்தே எதி.
ஆனந்த: வேண்டாம் மாமி போதும்.



නැන්දා: මෙන්න තේ බොන්න.
மென்ன தே பொன்ன.
மாமி: இந்தாங்க தேநீர் குடியுங்கள்.

ආනන්ද: නැන්දේ මට බෑග් එකක් දෙන්න.
நெந்தே மட பேக் எகக் தென்ன
ஆனந்த: மாமி எனக்கு ஒரு பேக் தாருங்கள்.

නැන්දා: මේ කූඩය අරගෙන යන්න. මෙන්න සල්ලි.
மே கூடய அரகென யன்ன. மென்ன சல்லி.
மாமி: இந்தக் கூடையை எடுத்துக்கொண்டு போங்கள். இந்தாங்க காசு.

ආනන්ද: මම ගිහිල්ලා එන්නම් නැන්දේ.
மம கிஹிள்ளா எண்ணம் நெந்தே.
ஆனந்த: நான் போய் வருகிறேன் மாமி.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: நான் இறைச்சி சாப்பிடுவதில்லை.
**මම මස් කන්නේ නැහැ.**

i. மாசிச் சம்பல் நல்ல ருசி.

..........................................................................

ii. இந்தக் கூடையை எடுத்துக்கொண்டு போங்கள்.

..........................................................................






'Was' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை (Past Tense Auxiliary Verb) நிகழ்கால எச்சவினைச் சொல்லுடன் (Present Participal) கையாண்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு' வாக்கியங்களையும் 'வினா' வாக்கியங்களையும் மேலும் ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Ranjini was watching.
ரஞ்ஜினி பார்த்துக்கொண்டு இருந்தாள். (உடன்பாடு)

(ஆ) Was Ranjini watching?
ரஞ்ஜினி பார்த்துக்கொண்டு இருந்தாளா? (வினா)

(இ) Ranjini was watching television.
ரஞ்ஜினி தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டு இருந்தாள். (உடன்பாடு)

(ஈ) Was Ranjini watching television?
ரஞ்ஜினி தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டு இருந்தாளா? (வினா)

---

(அ) The dog was barking.
அந்த நாய் குரைத்துக்கொண்டு இருந்தது. (உடன்பாடு)

(ஆ) Was the dog barking?
அந்த நாய் குரைத்துக்கொண்டு இருந்ததா? (வினா)

(இ) The dog was barking last night.
அந்த நாய் கடந்த இரவு குரைத்துக்கொண்டு இருந்தது? (உடன்பாடு)

(ஈ) Was the dog barking last night?
அந்த நாய் கடந்த இரவு குரைத்துக்கொண்டு இருந்ததா? (வினா)

---

(அ) Your brother was standing.
உனது சகோதரன் நின்றுகொண்டு இருந்தான். (உடன்பாடு)

(ஆ) Was your brother standing?
உனது சகோதரன் நின்றுகொண்டு இருந்தானா? (வினா)

(இ) Your brother was standing here.
உனது சகோதரன் இங்கே நின்றுகொண்டு இருந்தான். (உடன்பாடு)

(ஈ) Was your brother standing here?
உனது சகோதரன் இங்கே நின்றுகொண்டு இருந்தானா? (வினா)

---

(அ) Your sister was waiting.
உனது சகோதரி காத்துக்கொண்டு இருந்தாள். (உடன்பாடு)

(ஆ) Was your sister waiting?
உனது சகோதரி காத்துக்கொண்டு இருந்தாளா? (வினா)

(இ) Your sister was waiting here.
உனது சகோதரி இங்கே காத்துக்கொண்டு இருந்தாள். (உடன்பாடு)

(ஈ) Was your sister waiting here?
உனது சகோதரி இங்கே காத்துக்கொண்டு இருந்தாளா? (வினா)

---

(அ) Your dog was barking.
உனது நாய் குரைத்துக்கொண்டு இருந்தது. (உடன்பாடு)

(ஆ) Was your dog barking?
உனது நாய் குரைத்துக்கொண்டு இருந்ததா? (வினா)

(இ) Your dog was barking yesterday night.
உனது நாய் நேற்று இரவு குரைத்துக்கொண்டு இருந்தது. (உடன்பாடு)

(ஈ) Was your dog barking yesterday night?
உனது நாய் நேற்று இரவு குரைத்துக்கொண்டு இருந்ததா? (வினா)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.


# வறிய நாடுகளின் மீது கரிசனை காட்டப்பட்ட சிறப்பு மாநாடு





உலகில் வறுமைக்கு உள்ளாகியிருக்கும் நாடுகள் மேலும் வறுமை நிலைக்கு ஆளாகும் நிலை தோன்றியிருப்பதாக நிதி மற்றும் வளர்ச்சித்துறை மாநாட்டில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. உலக வங்கியின் 185 உறுப்புரிமை நாடுகளினது அமைச்சர்கள், சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

வொஷிங்டன் நகரில் நடைபெற்ற இந்த மாநாட்டில் உலக நாடுகள் தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில் அதனை சீர்படுத்துவதற்கான வழி வகைகளை மட்டுமே ஆராய்ந்து கொண்டே இருந்தால் வறுமை நாடுகளுக்கு எந்த வொரு உதவிகளும் கிட்டாமல் அவை மேலும் வறுமை நிலைக்கே தள்ளப் பட்டுவிடும் எனவும் எனவே, இந்நாடுகளுக்கு உதவுவதற்காக உலக வங்கிக்குரிய வளங்களை அதிகரிக்க வேண்டிய அவசியத் தேவை ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு செய்யாவிடில் 2015 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய ரீதியில் வறுமையை ஒழிப்பதான ஐ.நா வின் திட்டத்திற்கு அது பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துவிடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், நடுத்தர வருமானத்தை ஈட்டும் நாடுகளுக்குரிய கடன் தொகையை 100 பில்லியன் வரை அதிகரிக்க வேண்டும் என்று உலக வங்கியின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானின் ஒரு பிரதேசம் தலிபான்களின் கட்டுப்பாட்டில்

தலிபான் அமைப்பினர் பாகிஸ்தானில் குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருப்பதாக அறிவித்ததையடுத்து உலக நாடுகள் பல தமது அதிருப்தியினையும் கண்டனத்தையும் பாகிஸ்தானுக்குத் தெரிவித்துள்ளன.

இவ்வாறு தலிபான் அமைப்பினர் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரிலிருந்து 100கி.மீற்றர் தொலைவிலுள்ள 'புனார்' என்ற பகுதியை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்திருப்பதையிட்டு கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்கா, இது வெளிப்புறத்தே பாகிஸ்தானுக்கு பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடிய காரணியாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளது.




நூற்றுக் கணக்கி லான ஆயுததாரிகள் குறிப்பிட்ட இடத்தில் பாதுகாப்பு அரண்களை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி, தலிபான் அமைப்பினரை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சியாக, பாகிஸ்தான் அரசாங்கத்தின் அதிகாரிகள் சிலர், தலிபான் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருவதாகவும் அறியவருகின்றது.

# வைரஸ் காய்ச்சலினால் மெக்ஸிக்கோ ஸ்தம்பிதம்



'மெக்ஸிக்கோ' நாட்டில் வேகமாகப் பரவி வருகின்ற பன்றிக் காய்ச்சலினால் அந்நாட்டின் தலைநகரப் பகுதி பெரும் அல்லோலக்கல்லோலப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

'ஸ்வைன்' என்று பெயரிடப் பட்டிருக்கும் இந்தக் காய்ச்சலினால் நூற்றிற்கும் மேற்பட்டோர் மரணமாகியிருப்பதுடன் ஆயிரக் கணக்கானோர் சிகிச்சைகளுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி, வைரஸ் தொற்றிலிருந்து மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ளும் பொருட்டு அனைவருக்கும் மூக்கையும் வாயையும் மூடும் வகையில் மருந்து கலந்த கவச அணிகலன்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஆலயங்கள், விளையாட்டரங்குகள், வீதிகள், சந்தைகள், திரையரங்குகள், ஹோட்டல்கள் என்று மக்கள் கூடும் பொது இடங்கள் அனைத்தும் மக்கள் எவரும் இன்றி வெறிச்சோடிப் போயுள்ளன.இந்த தொற்றுக் காய்ச்சலிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் பொருட்டு எவருமே தமது வீடுகளை விட்டு வெளியே வராமல் செயலற்றுக் காணப்படுகின்றனர். இதற்குரிய சிகிச்சை வழிமுறைகள் குறித்து சுகாதாரத் துறையினர் தீவிர ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



அற்லஸ் கேள்வி - 202

**கேள்வி:** மெக்ஸிக்கோவில் பரவியுள்ள காய்ச்சலை ஏற்படுத்தியுள்ள வைரஸின் பெயர் என்ன?

சரியான விடை.......................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 202,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 200 இன் சரியான விடை: ரொபர்ட் கேட்ஸ்**

பரிசு பெறுவோர்

எஸ்.ஜனூர்தன்,
18, விசாகா மாவத்தை, பண்டாரவளை.

ஆதிலா நுஸ்ரத்,
144/1, குருந்துகஹ எல, அக்குறனை.

ஸ்ரீ.திருவாரூரன்,
C1 1/3, டிசொய்சா தொடர்மாடி,
மொரட்டுவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேகாலை, புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவின்போது இடம் பெற்ற மேற்கத்தேய நடனக் காட்சியையே படத்தில் காண்கிறீர்கள்.
(தகவல்: எஸ்.பி.பிரேமநாதன்)

## விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



தர்கா நகர், கெனல் வீதியைச் சேர்ந்த மு.அஸ்கர்-ரினோஸா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மத் அஸ்ரி, தனது 5 ஆவது பிறந்தநாளை 26.04.2009 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று, சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.
(தகவல்: எம்.எஸ்.எம்.அஸ்கர்)




திருகோணமலை, கனேஸ் லேனை வசிப்பிடமாகக் கொண்ட றிஸ்வான்-றொசானா தம்பதியரின் செல்வப் புதல்வி ரக்சானா பேகம், தனது 3 ஆவது பிறந்தநாளை 3.5.2009 அன்று கொண்டாடினார்.
இவரை உம்மா, வாப்பா உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.


## கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ஃபஸான் ஃபாயிஸ், தரம் - 5,
தாருல் உலூம் மு.ம.வித்.,
இறம்புக்கனை.



ஆர்.காயத்ரி, தரம் - 11,
ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்.,
லுணுகலை.



ஃபாத்திமா ஸன்ஹா, தரம் - 7,
இக்ரா மு.ம.வித்.,
உலப்பனை.



கே.ரோசி, தரம் - 6,
ஆட்லோ த.ம.வித்.,
அக்கரப்பத்தனை.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2659
பா.சாயிரா,
தரம் - $9^{A}$,
சைவப்பிரகாச ம.கல்.,
வவுனியா.



அங்.இல : 2660
,அ.சிவாஞ்சனா,
தரம் - 11,
சின்னடம்பன் பாரதி
வித்.,நெடுங்கேணி.



அங்.இல : 2661
எம்.றிஹாம்,
தரம் - 6,
மிரிஹம்பிடிய மு.வித்.,
பனாதரகம.



அங்.இல : 2662
லோ.மதுரன், தரம் - 7,
புனித சவேரியார்
ஆ.தே.பாட.,
மன்னார்.



அங்.இல : 2663
எஃப்.அஸ்மியா,
தரம் - 6,
அல்-அரபா மு.வித்.,
நாவலப்பிட்டி.



அங்.இல : 2664
சப்நாஸ் அஹமட்,
தரம் - 7,
ஹைலன்ஸ் கல்.,
ஹட்டன்.



அங்.இல : 2665
எம்.நஷீத்,
தரம் - 11,
எம்.எஸ்.ஏ.கல்.,
மதுரன்குளி.



அங்.இல : 2666
அப்துல் முயிஸ்,
தரம் - 5,
அல்-மதீனா தே.பாட.,
மடவள பஸார்.



அங்.இல : 2667
ஜெ.கெனத்,
தரம் - 3,
மத்திய ம.வித்.,
வவுனியா.



அங்.இல : 2668
எஃப்.சப்னம்,
தரம் - 7,
ஆமினா தே.பாட.,
மாத்தளை.

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

## எனது செல்லப்பிராணி



வைஷ்ணவி லிங்கேஸ்வரன்,
தரம் - $3^{E}$,
புனித ஜோன் பொஸ்கோ
வித்., யாழ்ப்பாணம்.



யூஸுஃப் அஹமட்,
தரம் - $2^{B}$,
கா/ஸாஹிரா தே.பாட.,
கிந்தோட்டை.

## எனது பூந்தோட்டம்



என்.அக்மா,
தரம் - $3^{A}$,
அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.



திசோ சொப்னா,
தரம் - $3^{B}$,
அல்-மதீனா வித்.,
மருதமுனை.

## துணி அலங்காரம்



எஸ்.யுரோனிக்கா,
தரம் - 8,
பாலர் இயேசு கன்னியர் மடம்,
இரத்தினபுரி.

## மீன் பிடிப்போர்



எம்.எஃப்.பஸ்மிலா,
தரம் - 11,
மடிகே முஸ்லிம் ம.வித்.,
குருநாகல்.

## பழரசம் ஒன்றுக்கான விளம்பரம்




எஸ்.ரஹ்மதுல்லா,
தரம் - $7^{D}$,
ஸாஹிரா தே.பாட.,
மாத்தளை.

## வயலில் வேலை செய்வோர்



க.லுஜீவன்,
தரம் - $9^{A}$,
இந்து தேசிய கல்.,
மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இளவரசன் இவானின் சகோதரர்கள் தீப்பறவையைத் தேடி வேறு நாடுகளுக்குச் சென்றிருந்தார்கள். இப்போது வெறுங்கையுடன் அரண்மனை திரும்பிக் கொண்டிருந்தார்கள். இளவரசன் இவான் எல்லாவற்றையும் பெற்றுவிட்டதை அவர்கள் பார்த்தபோது, அவர்கள் பொறாமையுடன் ''நம் சகோதரன் இவானை நாம் கொன்று விடலாம். ஏனெனில், அவனுடைய வேட்டைப் பொருள்கள் எல்லாம் நம் வசமாகும்'' இதனையடுத்து அவர்கள் இளவரசன் இவானைக் கொன்றார்கள். பிறகு தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரை மீது தீப்பறவையுடன் ஏறி, வேறு குதிரை ஒன்றில் பேரழகி யெலேனாவை அமர்த்தி அவளிடம், ''இதுபற்றி அரண்மனையில் நீ ஒரு வார்த்தையும் பேசக்கூடாது'' என்று மிரட்டினார்கள்.


அப்போது அங்கே தலைக்கு மேல் அண்டங்காக்கைகள் வட்டமடிக்க, தரையில் இறந்து கிடந்தான் இளவரசன் இவான். திடீரென்று, சாம்பல்நிற ஓநாய் அவனை நோக்கி ஓடிவந்து ஓர் அண்டங்காக்கையையும் அதனது குஞ்சையும் பிடித்தது.

''பறந்து போய் எனக்கு சாவு நீரும் உயிர் நீரும் கொண்டு வா அண்டங்காக்கையே! நீ கொண்டு வந்தால், உனது குஞ்சை நான் விட்டுவிடுவேன்'' என்றது ஓநாய்.

அண்டங்காக்கை பறந்து சென்றது. அதன் குஞ்சை ஓநாய் பிடித்து வைத்திருக்கும்போது அதனால் வேறு என்ன செய்யமுடியும்? ஒரு வழியாக இறுதியில் அது சாவு நீருடனும் உயிர் நீருடனும் திரும்பி வந்தது. சாம்பல் நிற ஓநாய் சாவு நீரை இளவரசன் இவானுடைய காயங்களின் மீது தெளிக்க, காயங்கள் ஆறிப்போயின. பிறகு உயிர் நீர் கொண்டு அவன் மீது தெளிக்க, இளவரசன் இவான் திரும்பவும் உயிர் பெற்று எழுந்தான்.

''ஓ! எவ்வளவு நேரம் ஆழ்ந்து தூங்கிவிட்டேன்'' என்றான்.

''ஆகா.... நான் இல்லை என்றால் உன்னால் ஒருபோதும் விழித்திருக்கவே முடியாது. உன் சொந்தச் சகோதரர்கள் உன்னைக் கொன்றுவிட்டு, உனது எல்லாச் செல்வங்களையும் எடுத்துப் போய்விட்டார்கள். என் முதுகின் மேல் ஏறிக்கொள். சீக்கிரம்!'' என்றது ஓநாய்.



பின்தொடர்ந்து புறப்பட்ட இளவரசன் விரைவில் தன் இரு சகோதரர்களையும் பிடித்துக் கொண்டான். சாம்பல்நிற ஓநாய் அவர்களை துண்டு துண்டாகக் கிழித்து, துண்டுகளை வயல்வெளியில் போட்டது. இளவரசன் இவான் சாம்பல் நிற ஓநாயை வணங்கி கடைசியாக விடைபெற்றுக் கொண்டான். தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரையில் ஏறி அரண்மனைக்குக் கிளம்பினான். தன் தந்தைக்கு தீப்பறவையையும் தனக்கு ஒரு மணமகளையும் கொண்டு போனான்.

அரசர் பெரேந்தி பெரு மகிழ்ச்சியுற்று, எல்லாவற்றைப் பற்றியும் தன் மகனிடம் கேட்டார். தனக்குச் சாம்பல் நிற ஓநாய் எவ்வாறு உதவியது, தூங்கியபோது தன் சகோதரர்கள் தன்னை எப்படிக் கொன்றார்கள், சாம்பல் நிற ஓநாய் அவர்களை எப்படித் துண்டு துண்டாகக் கிழித்தது என்பனவற்றை இளவரசன் இவான் அவரிடம் சொன்னான்.

முதலில் அரசர் பெரேந்தி கடுமையாக வருந்தினார். ஆனால், சீக்கிரமே ஆறுதல் அடைந்தார். இளவரசன் இவான் பேரழகி யெலேனாவை மணந்தான். இருவரும் ஒன்றாக சுகநலத்தோடும் மகிழ்ச்சியோடும் நீண்ட காலத்திற்கு வாழ்ந்தார்கள்.

**இளவரசன் இவான் சாம்பல் நிற ஓநாயை வணங்கி கடைசியாக விடைபெற்றுக் கொண்டான். தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரையில் ஏறி அரண்மனைக்குக் கிளம்பினான். தன் தந்தைக்கு தீப்பறவையையும் தனக்கு ஒரு மணமகளையும் கொண்டு போனான்.**

**(அடுத்த இதழில் 'இரண்டு சகோதரர்கள்' ஆரம்பமாகின்றது)**



# சேவலும் சிலந்தியும்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு 'ஜுகாக்' என்ற அரக்கன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனது இரு தோள்பட்டைகளிலும் இரண்டு பெரிய, அசிங்கமான, துர்நாற்றமுள்ள பாம்புகள் சீறிக் கொண்டிருக்கும். அந்தப் பாம்புகளுக்குத் தினமும் இரண்டு இளைஞர்களின் மூளையை உணவாகக் கொடுக்க வேண்டும்.

எனவே. அந்த அரக்கன் தினமும் இளைஞர்களைக் கொன்று வந்தான். மக்கள் இதுகுறித்துக் கவலை அடைந்தபோதும் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. பல ஆண்டுகளாக இந்த அரக்கனின் அட்டூழியம் தொடர்ந்தது. ஆனால். ஒருநாள் இந்த அரக்கனுக்கு எதிராக பரிதுன் என்ற தைரியமான இளைஞன் ஒருவன் எழுந்தான். முன்னர் அவனது தந்தை அந்த அரக்கனால் கொல்லப்பட்டிருந்தார். அதற்குப் பழிவாங்கத் துடித்தான் அவன்.

வீரம்மிக்க இளைஞனான பரிதுனுக்கும் அரக்கனுக்கும் இடையிலான மோதல் பல வாரங்கள் வரை நீடித்தன. இறுதியில் அரக்கன் ஜுகாக்கைத் தோற்கடித்த பரிதுன். அவனை வலுவான சங்கிலியால் பிணைத்தான்.

அப்போது சரோஷ் என்ற தேவதை தோன்றி, ஜுகாக்கை தமாவன்ட் மலைக்குக் கீழே ஆழமாகக் குழி தோண்டிப் புதைக்குமாறு ஆலோசனை கூறியது.

அவ்வாறு புதைக்கப்பட்ட பின்னும் அந்த அரக்கன் இறக்கவில்லை அவன் நாளுக்கு நாள் பலம் பெற்றுக்கொண்டே இருந்தான். தன்னைப் பிணைத்திருந்த சங்கிலியையும் தகர்த்து எறிய முற்பட்டான். சங்கிலியும் பலவீனமாக ஆரம்பித்தது. உடனே அதை அறிந்த சேவல் ஒன்று கூவியது. உடனே தேவதை சரோஷ், ஒரு சிலந்தியை அனுப்பியது. அது, தளர்ந்த சங்கிலிகளை தனது வலையால் வலுப்படுத்தியது. இப்படி ஜுகாக் அரக்கனிடம் இருந்து உலக மக்களை சேவலும் சிலந்தியும் காத்தன. அதனால்தான் பாரசீக மக்கள் எப்போதும் சிலந்தியைக் கொல்வதில்லை. சேவலையும் உணவாகச் சாப்பிடுவதில்லையாம்.

# ஐஃபள் கோபுர வினோதங்கள்

✸ முதலாம் உலகப்போரின்போது *(1914-1918)* பாரிஸ் நகரில் கிளிகள் மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட்டன. ஐஃபள் கோபுரத்தில் வைக்கப்பட்ட அந்தக் கிளிகள், தங்களது சிறப்பான கேட்புத்திறன் காரணமாக வெகுதொலைவில் எதிரி விமானங்கள் வரும்போதே சத்தம் எழுப்பி பாரிஸ் நகர மக்களை எச்சரித்தன.

✸ *19* ஆம் நூற்றாண்டில், பிரெஞ்ச் எழுத்தாளர்களான கை டி மாப்பசந்தும், எமிலி ஸோலாவும் மேலும் சில ஓவியர்கள், சிற்பிகளுடன் சேர்ந்து, ஐஃபள் கோபுரம் அவலட்சணமாக நின்று கொண்டிருப்பதாகப் பிரசாரம் செய்தனர். ஐஃபள் கோபுரம், பயனேதும் இல்லாமல் பூதாகரமாக நிற்பதாகவும் அது பிரெஞ்ச் கலையைப் பாதிப்பதாகவும் எனவே, அதை அகற்ற வேண்டும் என்றும் அரசுக்கு மனு அனுப்பினர்.

✸ ஐஃபள் கோபுரத்தை மிகவும் வெறுத்த கை டி மாப்பசந்த் என்பவர் தினமும் ஐஃபள் கோபுரத்தில் உள்ள உணவகத்தில் உணவு சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதற்கு அவர் கூறிய காரணம், 'பாரிஸ் நகரில் ஐஃபள் கோபுரம் தெரியாத ஒரே இடம் அதுதான்' என்பதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள்





2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் 49 போட்டிகளில் 12 போட்டிகள் இலங்கையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய 29 போட்டிகள் இந்தியாவிலும், 8 போட்டிகள் பங்களாதேஷிலும் நடைபெறும்.

ஏற்கனவே மேற்படி போட்டிகளை இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில்நடத்துவதென்றே தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், பாகிஸ்தானில் இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தையடுத்து அந்நாட்டில் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாககருதி உலகக் கிண்ணப் போட்டிகளை அங்கு நடத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டதையடுத்தே இலங்கையில் மேலதிகமாக இன்னும் மூன்று போட்டிகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டதன் மூலம் மொத்தமாக 12 போட்டிகள் இலங்கைக்கு கிடைத்துள்ளன. அதன்படி, ஒரு அரையிறுதிப் போட்டியும் இதில் அடங்கும். போட்டியின் ஆரம்ப வைபவம் 2011 பெப்ரவரி 18 ஆம் திகதி பங்களாதேஷில் நடைபெறவுள்ளதுடன், முதலாவது போட்டி 19 ஆம் திகதி நடைபெறும்.

இந்தியாவில் நடைபெறவுள்ள போட்டிகளில் ஒரு அரையிறுதிப் போட்டியும் இறுதிப் போட்டியும் அடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசியாவில் நடத்தாமல் வேறு நாட்டில் நடத்துக

### மியன்டாட் வேண்டுகோள்



2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை ஆசிய நாடுகளில் நடத்தாமல் டுபாய் அல்லது அபுதாபியில் நடத்துவதே சிறந்தது என முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் ஜவிட் மியன்டாட் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் நடத்தப்பட இருந்த இப்போட்டிகளை பாதுகாப்புக் காரணங்களுக்காக பாகிஸ்தானில் நடத்தாமல் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் மாத்திரம் நடத்துவதற்குத் தீர்மானித்திருப்பதையிட்டு தனது அதிருப்தியை வெளியிட்டபோதே ஜாவிட் மியன்டாட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், பாகிஸ்தானில் போட்டிகளை நடத்துவதற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதென்றால், இந்தியாவிலும் அதே அச்சுறுத்தல் இருக்கத்தானே செய்யும் எனவும் 'டேவிஸ்' கிண்ணப் போட்டிகளைக் கூட இந்தியாவில் விளையாடுவதற்கு அவுஸ்திரேலியா மறுத்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள மியன்டாட் உலகக் கிண்ணப் போட்டிகளை ஒட்டுமொத்தமாக ஆசியாவில் நடத்தாமல் வேறு நாட்டில் நடத்துவதே நல்லது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## பாடசாலை மட்டத்திலான றகர் கிண்ணப் போட்டிகள்

### மே 2 தொடக்கம் ஜூலை 5 வரை



அகில இலங்கை ரீதியில் 20 வயதிற்கு உட்பட்டோருக்கான பாடசாலை மட்ட றகர் கிண்ண லீக் போட்டிகள் இம்மாதம் (மே) 2 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகியுள்ளன.

கல்வி அமைச்சும் தேசிய றகர் சம்மேளனமும் இணைந்தே இம்முறை இப்போட்டிகளை நடத்துகின்றன. முன்னதாக இப்போட்டிகளை பாடசாலை 'றக்பி' சம்மேளனமே நடத்தி வந்துள்ளது. எனினும், இப்போட்டிகள் தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக இந்த விடயம் நீதிமன்ற வழக்கு விசாரணையில் உள்ளது. இதனால், இப்போட்டிகள் நடத்தப்படுவது தடைப்பட்டு விடக் கூடாது என்பதற்காகவே இம்முறை கல்வி அமைச்சும் தேசிய றக்பி சம்மேளனமும் இணைந்து இப்போட்டிகளை நடத்த முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



மேற்படி, பாடசாலை மட்டத்திலான றக்பி கிண்ணப் போட்டிகள் ஜூலை மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அஜந்த மென்டிஸ் பத்தாம் இடத்தில்




சர்வதே கிரிக்கெட் சபையின் ஒருநாள் போட்டிகளில் பந்து வீச்சாளர்களுக்கான தரப்படுத்தல் பட்டியலில் இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளரான அஜந்த மென்டிஸ் பத்தாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்படி, பத்துப் பேரைக் கொண்ட பட்டியலில் இலங்கை அணியைச் சேர்ந்த மூன்று பந்து வீச்சாளர்கள் அடங்குகின்றனர்.

இதன்படி, இதில் நுவன் குலசேகர முதலாவது இடத்தையும் முரளிதரன் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்திய-இலங்கை அணிகளுக்கிடையே இறுதியாக நடைபெற்ற போட்டிகளில் அஜந்த மென்டிஸ் அதிகமான விக்கெட்களை வீழ்த்தவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலம்

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி ....)

✱இலக்கியம்,அழகியல் போன்ற துறைகளில் அதிக திறனுடையவர்கள்-அவற்றை அதிகம் விரும்புபவர்கள் 'புத்தாக்க சிந்தனை' அதிகம் உள்ளவர்களாக இருப்பர்.

✱ அவ்வாறே, அதிக புள்ளிகள், 'விருப்பம்' என்ற சொற்பிரயோகங்கள் ஏனைய பாடங்களுடன் ஒப்பீட்டளவிலான புள்ளிகளையும் விருப்பத்தையும் குறித்து நிற்கின்றன.

இவ்வாறான ஆற்றல்களும் இயல்புகளும் கருத்தில் கொள்ளப்படாமல் உயர் தரப் பாடநெறிக்கான பாடங்களைத் தெரிவு செய்தல் கூடாது. மேலும், உயர்தரத்தின்போது வழமையான பாடக்கலப்புகளுக்கு மாற்றாக, வித்தியாசமான பாடத்தெரிவுகளை மேற்கொள்ளவும் முடியும். உதாரணமாக; உயிரியல்,பௌதீகவியல், இரசாயனவியல் என்ற பாடக்கலப்பில், உயிரியலுடன் விவசாயத்தையும் ஏனைய இரண்டு பாடங்களுள் ஒன்றையும் தெரிவுசெய்யலாம். இப்பாட நெறியில் சிறப்பாக சித்தியெய்தும் ஒருவர் வைத்திய பீடத்தில் பல் வைத்திய பீடம், விலங்கு வைத்திய பீடம் தவிர்ந்த ஏனைய விஞ்ஞானப் பிரிவுகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

அதேபோல், கணித பாடத்துடன் உயர் கணிதத்தை ஒரு பாடமாகத் தெரிவுசெய்து, ஏனைய இரு பாடங்களுள் ஒன்றைத் தெரிவு செய்யலாம். இப்பாடநெறியில் சிறப்பாக சித்தி பெறுவோர் பொறியியல் தவிர்ந்த ஏனைய பௌதீக விஞ்ஞான பீடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். விஞ்ஞான அல்லது கணித பாடநெறிக்கான ஒன்று அல்லது இரண்டு பாடங்களுடன் கலைத்துறைக்குரிய பாடங்களைத் தெரிவுசெய்வதன் மூலம் பல்கலைக்கழகத்தில் இவ்விரு துறைகளில் விரும்பியதைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும். (இப்பாட நெறிகளுக்கான வசதி வாய்ப்புகள் பாடசாலையில் இருக்கின்றனவா? என்பதையும் தெரிந்துகொள்வது அவசியமாகும்) பாடக்கலப்பு தொடர்பான மேலதிக தகவல்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் வெளியிடப்படும் பல்கலைக்கழக விண்ணப்பத்துடனான புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ளன.

## ஆற்றல்களின் அடிப்படையிலான பாடத்தெரிவு

✱ பொதுவாக கலைத்துறைப் பாடங்கள், அதிகளவு நினைவாற்றலை வேண்டி நிற்கின்றன. எனவே, அதிக நினைவாற்றல் உள்ளவர்கள் கலைத் துறையை தெரிவு செய்யலாம். அரசியல், புவியியல் போன்ற பாடங்களைத் தெரிவு செய்யும்போது நினைவாற்றலுடன் சிறந்த கிரகிக்கும் ஆற்றலையும் கொண்டிருத்தல் வேண்டும்.

✱ தர்க்கவியல் (Logic) அல்லது கணிதத்தை ஒரு பாடமாகத் தெரிவு செய்யும் மாணவர்கள் கிரகிக்கும் ஆற்றலையும் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றலையும் கொண்டிருத்தல் வேண்டும்.



✱ மொழி, இலக்கியம் போன்ற பாடங்களைத் தெரிவு செய்பவர்கள் புத்தாக்க சிந்தனையும் நினைவாற்றலும் அதிகமாக இருப்பின் சிறந்த பெறுபேறுகளைப் பெறலாம்.

✱ கிரகித்தல் ஆற்றல் சிறப்பாக உள்ளவர்கள் கணக்கியல் பாடத்தைத் தெரிவு செய்யலாம். வர்த்தகக் கல்வி அல்லது இரசாயனவியல் போன்ற பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு கிரகித்தல் திறன், தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் என்பவற்றுடன் நினைவாற்றலும் அதிகமாக இருத்தல் வேண்டும்.

✱ உயிரியல், விவசாயம் போன்ற பாடங்கள் கிரகித்தல் திறனையும் விழி வழி நினைவாற்றலையும் தேவையாக கொண்டிருக்கின்றன.

✱ பௌதீகவியல் பாடத்தைப் பொறுத்தவரையில் கிரகித்தல் திறன், தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல், புத்தாக்க சிந்தனை போன்ற இயல்புகளைத் தேவையாகக் கொண்டிருக்கின்றன. பௌதீகவியல் பாடத்திற்கு நினைவாற்றல் பாரியளவில் தேவைப்படாவிட்டாலும் நினைவாற்றல் பெருமளவில் உடலசைவு வழியாக இருப்பின் பரிசோதனைகளை நினைவில் கொள்வது இலகுவாக இருக்கும்.

எனவே, க.பொ.த (சா/தர) த்தில் சித்திபெற்ற மாணவர்களே! உங்கள் எதிர்காலத்தை ஒளிமயமாக ஆக்கிக் கொள்வதற்கான பொறுப்பு உங்களிலேயே தங்கியுள்ளது. எனவே, இவ்வாறான இலகு முறைகளைப் பயன்படுத்தி, ஓரளவுக்கேனும் பொருத்தமான துறைகளைத் தெரிவுசெய்வது நல்ல விளைவுகளை ஏற்படுத்தும்.

-வைத்தியர் எம்.ஜே.ஹூஸ்னி



# மெழுகுவர்த்தியின் அறிமுகம்

சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகளாகவே மெழுகுவர்த்தி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆரம்ப காலத்தில் காய்ந்த மரத் தக்கையை மிருகக் கொழுப்பில் தோய்த்து, அந்தத் தக்கையை கொளுத்தி மெழுகுவர்த்தியாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். பின்னர் சணல், பருத்தி நூல்களை மிருகக் கொழுப்பில் தோய்த்தும் எரித்திருக்கிறார்கள்.

இவ்வாறிருக்க, 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் பெட்ரோல் சுத்திகரிக்கும்போது கிடைக்கும் உப பொருளான 'பெரஃபின்', எனும் பொருள் மெழுகுவர்த்தி தயாரிக்க மிக ஏற்றது என்று கண்டறியப்பட்டது. இதன் பின்னர்தான் தற்போது நாம் பயன்படுத்தும் மெழுகுவர்த்தி தயாரிக்கப்பட்டு,பாவனைக்கு வந்தது.


# வீட்டிலிருந்தே ஆங்கிலம் கற்க இலகு வழி.

## " The BEST " ENGLISH HOME STUDY PACK WITH CD'S

JEI கல்வி நிலையம் வழங்கும் ஆங்கில பேச்சு பயிற்சி புத்தகங்களையும் CD களையும் கற்பதற்கு கேட்பதற்கு ஒரு நாளைக்கு 45 நிமிடங்கள் காலையில் / மாலையில் செலவிட முடியுமெனில் 45 நாட்களின் முடிவில் உங்களாலும் சரளமாக ஆங்கிலத்தில் பேச முடியும்.

" THE BEST " ENGLISH HOME STUDY PACK ஒன்றில் அடங்குபவை

1. 13 ஆங்கில பேச்சு பயிற்சி இலக்கண புத்தகங்கள். ஒரு பாடத் தொகுதியை 3 நாட்கள் கற்க வேண்டும்.இதற்காக காலையில் மாலையில் 45 நிமிடங்களை ஒதுக்கி கற்க வேண்டும்.
2. ஆங்கில தமிழ் அகராதி. (Lifco English Tamil Dictionary இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது
3. Spoken English -Video Cd. (ஆங்கில பேச்சு பயிற்சி வாசிப்பு அடங்கியது
4. 4 Spoken English - Audio Cd. ஆங்கில பேச்சு பயிற்சி இலக்கணம் அடங்கிய தமிழ் மொழி மூல விளக்கத்துடன் கூடிய 4 Mp3 CD கள். CD யில் அடங்கி இருக்கும் விடங்கள் யாவும் வழிகாட்டி புத்தகங்களில் அடங்குவதால் வழிகாட்டி புத்தகத்தை படித்தவாறே CD களை கேட்க வேண்டும். இதற்காக ஒரு நாளைக்கு 30 நிமிடங்களை ஒதுக்க வேண்டும்.
5. 2 AUDIO CD GUIDE BOOKS CD வழி காட்டி புத்தகங்கள் இரண்டு
6. JEI - BAG (அழகிய BAG)
7. சிங்கள பேச்சு பயிற்சி புத்தகம்.
8. THE NECKLACE - Short Story Book தமிழ் விளக்கத்துடன் கூடிய சிறுகதை புத்தகம். 4 நாளைக்கு ஒரு பாகத்தை கற்று வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.
9. ANSWER SHEETS - விடை எழுதும் பத்திரங்கள்.

பயிற்சிகளுக்கு விடை எழுதி எமக்கு அனுப்ப வேண்டும். அவைகள் பிழை திருத்தப்பட்டு மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் மூலம் நீங்கள் விடும் பிழைகளை திருத்திக் கொள்ளலாம். பாடத் தொகுதிகளையும் CD களையும் கட்டாயமாக கற்க,கேட்க வேண்டும்.

நீங்கள் முயற்சி செய்தால் The BEST ENGLISH PACK பெற்று 45 நாட்களில் சரளமாக ஆங்கலத்தில் பேசலாம்.
( Study Pack இன் உள்ளே வழி காட்டி அட்டை காணப்படும் )

மாணவர் அடையாள அட்டை

மாணவர் அடையாள அட்டை இலவசமாக வழங்கப்படும். பெற இரு புகைப்படங்களின் பின் பதிவு இலக்கத்தை குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். அட்டை பெறுவது கட்டாயமில்லை Pack ஐ பெற்றதும் அதன் உள்ளே உங்கள் பதிவு எண் காணப்படும்

யாருக்கு பொருத்தமானது. ?

- Usa,Uk,Canada போன்ற நாடுகளில் உயர்கல்வி கற்க செல்ல இருப்பவர்கள்.
- Saudi arabia,Kuwait,Quatar நாடுகளில் தொழில் வாய்ப்புக்காக செல்ல இருப்பவர்கள்.
- IELTS, TOEFL போன்ற சர்வதேச பரீட்சைகளுக்கு தோற்ற இருப்பவர்கள்.
- உள்நாட்டில் தொழில் புரிபவர்கள்,
- தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்பவர்கள்,
- இல்லத்தரசிகள்- (HOUSE WIFE)
- பாடசாலை செல்லும் மாணவர்கள்.

அரசாங்க அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்

REG NO: CPC/KY/DS/2/2/5715

பாடநெறியை 45 நாட்களில் முடித்ததன் பின்னர் Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும். இது பதிவு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. உள் நாட்டில் அல்லது வெளிநாட்டில் தொழில் வாய்ப்புகளை பெற உதவும்.




HOME STUDY PACK ஐ பெறுவது எப்படி ?

The BEST "ஆங்கில கற்கை பொதி ஒன்று ரூ. 2900/- மட்டுமே . நீங்கள் பெற விரும்பின் பின்வருமாறு SMS செய்யுங்கள்.

VJ இடைவெளி ,உங்கள் Name Address, T.p no & Date Of Birth.என்பவற்றை

SMS 0777- 806 606

( உங்கள் பிறந்த தினத்தன்று அதிசயத்தக்க பரிசொன்றை பெறும் வாய்ப்பு உண்டு )

கற்கை பொதி தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். பின்னர் கட்டணம் செலுத்தி தபால் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் .

அல்லது COMMERCIAL 80-400-52-644
HNB - 4157-3850-2904-0001
Ramzan Director Jei என்ற கணக்கில் ரூ 2600/– வைப்பு செய்து விட்டு அறிவிக்கவும்.

வீட்டுக்கே விநியோகம்

Colombo,Kandy & Gampaha மாவட்டங்களுக்கு நேரடியாக வீட்டுக்கே அனுப்பப்படும்

" The BEST " ENGLISH PACK P.O.Box.119.Kandy Tel .0814-92 91 93


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 204 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-215) |
|---|---|---|---|---|
| ஆப்தீன் முஹம்மத், தரம் - 5, உடநிதிகம மு.வித், கெக்கிராவை. | ஹஸ்மி அஹ்மத், தரம் - 4, அல்-அமீன் வித்., காத்தான்குடி. | ம.டில்சாயினி, தரம் - 4, கணபதி த.ம.வித்., நோட்டன் பிரிட்ஜ். | ஸ்ரீ.திருவாரூரன், தரம் - 9^C, இந்துக் கல்., கொழும்பு-04. | ம.நர்மதா, தரம் - 9, வெஸ்லி உ.பாட., கல்முனை. |

### 1 ஆறு வித்தியாசங்களில் √ அடையாளமிடுக





### கணக்குப் புதிர் — 3

(A) ஐந்து இலக்கங்கள் உள்ள ஓர் எண்ணை நான்கால் பெருக்கினால் வரும் தொகை, அந்த எண்ணைத் திருப்பிப் போட்டாலும் வரும். அந்த எண் யாது?

(அ) 78954 (ஆ) 21978


(இ) 34726 (ஈ) 17671

(B) வசந்தனின் வயதைத் திருப்பிப் போட்டால், அவரது மனைவியின் வயது வரும். அவர்கள் இருவரின் வயதுகளையும் கூட்டி, பதினொன்றால் வகுத்தால், அவர்களின் வயது வித்தியாசம் ஒன்பது என்று வரும். வசந்தன் மூத்தவர் என்றால், அவர்களின் வயதுகளைத் தனித்தனியே கணக்கிடவும். ..............................

### இணைக்க — 4

| | |
|---|---|
| 1. பத்தாவது ஆண்டு நிறைவு | 1. வெள்ளி விழா |
| 2. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு | 2. நூற்றாண்டு விழா |
| 3. ஐம்பதாவது ஆண்டு நிறைவு | 3. பொன் விழா |
| 4. அறுபதாவது ஆண்டு நிறைவு | 4. தசரத விழா |
| 5. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு | 5. மணி விழா |
| 6. நூறாவது ஆண்டு நிறைவு | 6. பவள விழா |

### 5 குறுக்கெழுத்துப் போட்டி இல. 218




**மேலிருந்து கீழ்**

01. பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஒருவர்.
02. மியன்மார் நாட்டின் பழைய பெயர்.
03. இளம் பெண் - ஒத்த கருத்துச்சொல்.
04. பாம்பாட்டியிடம் இருக்கும் அவனது தொழில்சார் பொருளொன்று.
06. இறந்தவரை அடக்கம் செய்த அல்லது எரித்த இடத்தில் அமைக்கப்படுவது.
08. (குறித்த நோக்கத்திற்காக அணி திரள்பவர்களின்) தொகுதி.

**இடமிருந்து வலம்**

01. தாவரத்தின் பகுதிகளில் ஒன்று.
02. 'வகு'/'பிரி' என்றும் அர்த்தப்படுத்தலாம்.
04. தெளிவாக/வெளிப்படையாக இல்லாமல், புதிராக இருப்பதைக் குறிக்கும்.
05. அரசனின் மகள்.
07. அடவி-ஒத்த கருத்துச்சொல்.
08. பசுபிக் சமுத்திரத்தையும் அட்லாண்டிக் சமுத்திரத்தையும் பிரிக்கும் கால்வாய்.
09. வெயில்/மழையிலிருந்து பாதுகாப்பு அளிப்பது.

### அறிவுக்கு விருந்து 204 விடைகள்

**போட்டி - 03**

| | | | |
|---|---|---|---|
| (அ) 318 | - CCCXVIII | (உ) 95 | - XCV |
| (ஆ) 50 | - L | (ஊ) 570 | - DLXX |
| (இ) 2090 | - MMXC | (எ) 604 | - DCIV |
| (ஈ) 23 | - XXIII | (ஏ) 17 | - XVII |

**போட்டி - 04**

1. UNESCO * United Nations Educational, Scientific and Cultural Organization.
2. UNIDO * United Nations Industrial Development Organization.
3. FAO * Food and Agriculture Organization of the United Nations.

குறிப்பு: - போட்டி 4 இற்கான வினாவில் **Culture** என்பது **Calture** என்று பிரசுரமாகியிருந்தது. சரியான சொல் **Culture** என்பதாகும். தவறுக்கு வருந்துகிறோம்.




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.05.13 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 207**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### குறுக்கெழுத்துப்போட்டி 215 விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 01. தேசிய கீதம் | 01. தேகம் |
| 02. கரி | 03. ஆவி |
| 03. ஆனி | 05. சிரி |
| 04. வில்லி | 06. வேனில் |
| 06. வேலி | 07. சிலி |
| 09. வேம்பு | 08. கீரி |
| 10. குரு | 10. குரும்பை |

**குறுக்கெழுத்துப் போட்டி -218**
**"விஜய்" த.பெ.எண். 2037**
**கொழும்பு**

### போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

### சரியான உருவை அமைக்க — 2





### பாராட்டுப் பெறுவோர்

எஃப்.இல்மா, தரம் - 9^X, ஸாஹிரா கல்., மாவனல்லை.

பவித்ரா முருகானந்தசர்மா, தரம் - 8^A, வேம்படி மகளிர் உ.பாட., யாழ்ப்பாணம்.

எம்.எஸ்.எம்.ஷஃப்னாஸ், தரம் - 11, தெழும்புகஹவத்த ம.வித்., அகுறனை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## கொழும்பு கோட்டையில் தொற்றுநோய்

**போ**ர்த்துக்கேய ஜெனரல் மிகவும் அநாதரவான நிலைக்குள்ளானார். எவ்வாறாயினும், உணவுப் பிரச்சினையை தீர்க்க வேண்டிய கட்டாயம் அவருக்கு இருந்தது. அதற்காக நிராயுதபாணிகளை கோட்டைக்கு வெளியே அனுப்பினார். ஒல்லாந்தர்களோ ஆயுதங்களைக் காட்டி அவர்களைப் பயமுறுத்தினர். மீண்டும் கோட்டைக்குள்ளேயே விரட்டியடித்தனர். சிலரைக் கைது செய்து தூக்கிலிட்டனர். ஏனையோரைப் பயமுறுத்துவதற்கே அவ்வாறு அவர்கள் செய்தனர்.

போர்த்துக்கேய ஜெனரலின் அந்த முயற்சியும் தோல்வியில் முடிந்ததால் அவர் மேலும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டார். இதேவேளை, கோட்டையினுள் பஞ்சம் வரவர அதிகரித்தது. அது போதாதென்று தொற்று நோயும் பரவத் தொடங்கியது. இதனால், பலர் பெருந்துயரத்தை அனுபவித்தனர். பலர் உயிரிழந்தனர். அதனால், படை பலம் குறைந்தது. படை அணிகளின் அங்கத்தவர் தொகையும் குறைந்தது.

பசிபட்டினியைப் பொறுக்க முடியாத போர்த்துக்கேயரோ மிருகங்களின் இறைச்சியையும் காய்ந்த மரக்கறிகளையும் உணவாக உட்கொண்டனர். மனித இறைச்சியையும் அவர்கள் உண்டதாகக் கூறப்படுகின்றது. இந்த மனித அவலத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் சிலர் கோட்டையிலிருந்து வெளியேறி ஒல்லாந்தருடன் இணைந்து கொண்டனர். இச்சந்தர்ப்பத்தில் பெரும் வறட்சியும் ஏற்பட்டது. குளங்கள் வற்றிப் போயின. அது ஒல்லாந்தருக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. கோட்டையைத் தாக்கும் பொருட்டு கோட்டைக்கு மிக அருகில் வர வாய்ப்பாகவும் அமைந்தது. இதனால், போர்த்துக்கேயர் மேலும் பாதிப்படைந்தனர்.

இதேவேளை, மன்னன் இரண்டாம் இராஜசிங்கன் ரைகமவில் இருந்தான். அவரும் நகருக்கு வந்தார். சேனைகளின் தலைவரான 'ஜெரால்ட் ஹல்பட்' அவர்களைச் சந்திப்பதே அவரின் முக்கிய நோக்கமாக இருந்தது. அதற்குத் தகுந்த இடமொன்றையும் தயார்படுத்தினர். எனினும், அது நடைபெறவில்லை. மன்னன் சுகயீனமுற்றதே அதற்குக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்னி நகரில் ஒட்டகங்களின் அட்டகாசம்



அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வசித்து வருகின்ற மக்களுக்கு புதியதோர் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாம். அதாவது, அப்பகுதிகளில் அண்மைக்காலமாக பெருமளவில் ஒட்டகங்கள் படையெடுத்து வந்து பெரும் இடைஞ்சல்களை ஏற்படுத்துகின்றனவாம். இந்த ஒட்டகங்களுக்கு குடிப்பதற்கு நீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையின் காரணமாகவே இந்நிலை தோன்றியுள்ளதாம்.

முன்னைய காலங்களில் மனிதனுக்கு மிகவும் உதவிகரமான ஒரு விலங்கினமாகவே ஒட்டகம் இருந்து வந்தது. ஆனால், இன்றோ அதுவே பெரும் உபத்திரவமாக சிட்னி வாழ் மக்களுக்கு அமைந்துவிட்டது. இவ்வாறு நகரப் பகுதிகளுக்கு வருகின்ற ஒட்டகங்கள் தாகத்தின் காரணமாக அங்குள்ள நீர் குழாய்களைத் தாமாகவே திருகித் திறக்கின்றன. அப்படியும் முடியாவிட்டால், குழாயை உடைந்தாவது நீரை அருந்துகின்றனவாம். இவ்வாறு இந்த ஒட்டகங்கள் சிட்னி நகரில் அட்டகாசம் செய்வதனால், இந்த பிரச்சினைக்குத் தீர்வைக் காணுமுகமாக சிட்னி நகரசபை அரசாங்கத்திடம் இதற்கென நிதி ஒதுக்கீடொன்றை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக சுற்றுச் சூழல் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டிருந்த ஆராய்ச்சிகளின்படி ஒரு மில்லியனுக்கும் அதிகமான ஒட்டகங்கள் இவ்வாறு நகர் புறங்களை நோக்கிப் படையெடுத்துள்ளன என்று தெரியவந்துள்ளது. இதனை இனியாவது கட்டுப்படுத்தத்தவறினால் எதிர்காலத்தில் இது பாரிய பிரச்சினையை தோற்றுவித்துவிடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

19 ஆம், 20 ஆம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் மனிதர்களின் போக்குவரத்திற்கும் சுமைகளைக் கொண்டு செல்வதற்கும் ஒட்டகங்களே பெரிதும் பயன்பட்டிருந்தன. எனினும், காலப்போக்கில் வாகனப் போக்குவரத்து முறைமை அறிமுகமாகியதையடுத்து ஒட்டகங்களின் பயன்பாடுகள் கணிசமான அளவில் குறையத் தொடங்கியது. இதனால், இவை சுதந்திரமாக விடப்பட்டன.

இருப்பினும், இன்றைய காலகட்டங்களில் இவற்றிற்கு நீர், உணவுத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளமையின் காரணமாகவே தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக நகர்ப் புறங்களை நோக்கி இவ்வாறு படையெடுத்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. புவியில் ஏற்பட்டுள்ள சூழல் மாறுபாட்டின் காரணமாகவே இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, மே மாதம் 06 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 06, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org